விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 8 திங்கட்கிழமை (21.01.2002) தொலைபேசி 3378 ஒலி 33

மல்லிகா மிக்சர் மாளிகை
மல்லிகா
காரமான சுவையுடன்
ரேஸ்ரி பொம்பே றீபீஸ்
ரேஸ்ரி ரைறானிக் காரவடை
ரேஸ்ரி மரவள்ளி பீஸ்
இல.149, மின்சார நிலைய வீதி
(பஸ் நிலையம் அருகே)
யாழ்ப்பாணம்

## 2002 பெப்ரவரி 24 வரை
# யுத்த நிறுத்தம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு!
## விடுதலைப் புலிகள் அறிவிப்பு

(வவுனியா நிருபர்)

**சமாதான நல்லெண்ணத்தை உலகிற்கு உணர்த்தும் வகையில் யுத்த நிறுத்தத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் வன்னித்தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.**

**இந்த யுத்தநிறுத்தம் ஜனவரி மாதம் 24ம் திகதி நள்ளிரவில் இருந்து பெப்ரவரி மாதம் 24ம் திகதி நள்ளிரவுவரை நீடிக்கப்பட்டிருக்கும் எனவும் புலிகள் அறிவித்துள்ளனர்.**

**இந்த யுத்த நிறுத்த நீடிப்புக்குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வே அரசு மூலமாக இலங்கை அரசுக்கு அறிவித்துள்ளார்.**

நத்தார் பண்டிகை, புதுவருடம், தைப்பொங்கல் ஆகியவற்றை மையமாகவைத்து சமாதான சமிஞையை வெளிப்படுத்தும் முகமாக கடந்த வருடம் டிசம்பர் மாதம் 24ம் திகதி முதல் 2002 ஜனவரி 24ம் திகதிவரை ஒருமாத காலத்துக்கு ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்ததை விடுதலைப்புலிகள் அறிவித்திருந்தனர்.

இந்த யுத்தநிறுத்தம் எதிர்வரும் 24ம் திகதியுடன் முடிவடைய இருப்பதையடுத்து மேலும் ஒரு மாத காலமாக யுத்தநிறுத்த நீடிப்பு விடுதலைப்புலிகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடுதலைப்புலிகளின்வன்னி தலைமைச் செயலகம் விடுத்தஅறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது (2ம் பக்கம் பார்க்க)

# யுத்தக் கைதிகள் சிலரை புலிகள் விடுதலை செய்வர்?

(வவுனியா)

வடபகுதி யுத்தமுனைகளில் விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாக பிடிபட்ட படை வீரர்களில் சிலரை நல்லெண்ண அடிப்படையில் விடுதலைப் புலிகள் விடுவிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வடபகுதி யுத்த முனைகளில் இருந்து சுமார் 30 படைவீரர்கள் மட்டுமே தங்களிடம் யுத்தக் கைதிகளாக உள்ளனர் என்று வெளிநாட்டு, உள்நாட்டு பத்திரிகையாளர்களிடம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெவிரித்திருந்தார். இந்த முப்பது பேரில் சிலரை சர்வதேச செஞ்சிலுவை சங்கதினூடாக நல்லெண்ண அடிப்படை யில் புலிகள் விடிவிப்பார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## காணாமல் போன படையினரின்
# 3000 உறவினர்கள் நேற்று மடு சென்றனர்

(வவுனியா நிருபா)

வடபகுதிக்கான யுத்த முனையில் காணாமற்போன படைவீரர்களின் பெற்றோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்களில் மூவாயிரம்பேர் நேற்று 35 பஸ்களில் வன்னி சென்றுள்ளனர். இவர்களில் 10 பேர் புத்த பிக்குகளாவர்.

வடபகுதி யுத்த முனையில் காணாமற்போன படைவீரர்களின் பெற்றோர் பாதுகாவலர் சங்கத் தலைவர் ஏ.ஈ.நாணயக்கார தலைமையில் சென்ற இக்குழுவினர் தற்பொழுது மடுவில் தங்கியுள்ளனர்.

(2ம் பக்கம் பார்க்க)

# மோதல் தவிர்ப்பை அரசும் நீடித்துள்ளது
### பேராசிரியர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

இம்மாதம் 24ம் திகதியுடன் முடிவடையவிருக்கும் மோதல் தவிர்ப்பை அரசாங்கம் மேலும் ஒரு மாதகாலம் நீடிப்பதற்கு முடிவு செய்திருப்பதாக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் அறிவித்துள்ளார்.

புலிகளின் யுத்த நிறுத்த நீடிப்பு அறிவிப்பைத் தொடர்ந்து அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இதனை அறிவித்திருந்தார். அரசு அறிவித்திருந்த மோதல் தவிர்ப்பு இம்மாதம் 24ம் திகதியுடன் முடிவடைய இரப்பதை அடுத்து மோதல் தவிர்ப்பு நீடிப்பை அமைச்சர் பீரிஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை நோர்வே அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுவருவதாகவும் வடக்கிற்கும் தெற்கிற்கும் இணைப்புப்பாலமாக அரசு பொருளாதாரத் தடையை விலக்கியிருப்பதாகவும் பீரிஸ் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## தரைவழிப் பாதையைத் திறக்க நடவடிக்கை
# வவுனியா - கண்டி வீதியை திருத்தும் புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்!

(வவுனியா)

யாழ் குடாநாட்டுக்கான தரைவழிப் பாதையை திறக்கும் நோக்கில், வவுனியா கண்டி வீதியை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மிக விரைவில் யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதையை திறக்கவேண்டும் என்ற நோக்கில், வவுனியா கண்டி வீதியை புனரமைத்துச் செப்பனிட, வீதி திருத்தும் இயந்திரங்கள் தார் மற்றும் கல் ஆகிய பொருட்கள் வவுனியாவில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் அப்பகுதிகளில் இராணுவத்தினர் மற்றும் விடுதலைப் புலி உறுப்பினர்களால் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், பொறிவெடிகளை அகற்ற, ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரிடமும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

மிதிவெடி பொறிவெடி அகற்றப்படும் பிரதேசங்களில் மீண்டும் குழப்பநிலை ஏற்பட்டாலும் அவற்றை புதைக்க மாட்டோம் என்று அரசும் விடுதலைப் புலிகளும் உறுதியளித்தால்.

(2ம்பக்கம் பார்க்க)

# எரிபொருள் விநியோகிக்கும்

# அரசு - புலிகள் பேச்சு நடத்த

## எரிபொருள் விநியோகிக்கும்

# ஊர்திகள் சங்கம் இன்று ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட எரிபொருள் விநியோகிக்கும் ஊர்திகள் சங்கம் இன்று காலை ஊர்வலம் ஒன்றை நடத்தவுள்ளது.

தமது சங்கத்தின் மூலம் எரிபொருட்களை பொதுமக்களுக்கு விநியோகிக்காமையினால் ஏற்படும் அசௌகரியங்களை வெளிக்கொணரும் வகையில் இன்று காலை ஒன்பது மணிக்கு நல்லூர் கந்தசாமி ஆலய முன்றலில் சங்க உறுப்பினர்கள் மாட்டுவண்டி ஊர்திகள் சகிதம் ஆரம்பிக்கும் ஊர்வலம் யாழ் செயலகத்தை அடைந்து அங்கு யாழ் அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பதுடன் முடிவடையவுள்ளது. (ந.5)

# அரசு - புலிகள் பேச்சு நடத்த இந்தியாவில் இடம் வழங்குவதில்லை!

## அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முடிவு

(புதுடில்லி)

இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நோர்வே அரசு மேற்கொண்டு வரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளை இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் இந்தியாவில் மெற்காள்வதற்கு ஒரு போதும் இடம் அளிப்பதில்லை என்று இந்திய அரசியற் கட்சிகள் முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை இந்தியாவில் நடாத்துவதற்கு இடமளிக்க வேண்டும் என்று பல்வேறு வகையான அழுதங்களை பலதரப்பினரும் இந்திய மத்திய அரசுக்கு கொடுத்திருந்தனர்.

இந்த அழுத்தங்களை அடுத்து இந்தியாவில் தேசிய, பிராந்தியக் கட்சிகள் அனைத்தும் ஒன்று கூடி நோர்வேயின் அனுசரணையுடனான சமாதானப் பேச்சு வார்த்தைக்கு இந்தியாவின் எந்த மானிலத்தையும் தளமாகப் பாவிப்பதற்கு மத்திய அரசு அனுமதிக்கக் கூடாதென்று தீர்மானித்துள்ளதாக தெரவிக்கப படுகிறது. (வ)

# புலிகளின் பலத்தை புரியாமல் ஜே.வி.பி இனவாதம் கக்குகிறது!

## பிரபல அரசியல் ஆய்வாளர் ரூபித பாஷ அபயவர்த்தனா கருத்து

(யாழ்ப்பாணம்)

சமாதானப்பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் விடுதலைப் புலிகளின் தடை நீக்கம் குறித்தும் தெரிவித்துவரும் கருத்துக்கள் சகல சேசலிச கோற்பாடுகளுக்கும் முரணானவையாக அமைந்துள்ளதென பிரபல சிங்கள ஆய்வாளர் ரூபித பாஷ அபயவர்த்தனா கருத்து வெளியிட்டுள்ளார்.

கீறோ என்ற பத்திரிகையில் எழுதிய ஜே.வி.பியின் எதிர்காலம் என்ற ஆய்வுக்கட்டுரையிலேயே அவா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது. சமாதானம் கனிந்துவரும் இவ்வேளையில் ஜே.வி.பியினர் இனவாத அணுகுமுறையை கைக்கொள்வது குறுகிய கால அரசியல் நோக்கத்துக்கே ஆகும். விடுதலைப் புலிகள் தனிநாட்டுக் கொள்கையை கை விட்டு ஆயுதங்களை ஒப்படைக்கும் வரை அவர்களுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தக்கூடா தென ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வா தெரிவித்திருப்பது விடுதலைப்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

ஆயிலிய நட்சத்திரம் கார்த்திகை மாதம் 54ம் ஆண்டு பிறந்த அரச தொழில் (ஆய்வுகூட உதவி யாளர்) பார்க்கும் எந்தவிததீய பழக்கங்களும் அற்ற சைவசமய வேளாளர்குல மணமகனுக்கு பெற்றோர் மணமகளை எதிர் பார்க்கிறார்கள் (தொழில் பார்க்கும் மணமகள் விரும்பத் தக்கது) ஜாதக விபரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி விளம்பர இல-231 மே/பா வலம்புரி (4254)

### தளபாடம் தேவை

நல்ல நிலையிலுள்ள பாவித்த மேசை, கதிரைகள் தேவை. தொடர்பு விளம்பர இல.100, மே/பா வலம்புரி, இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.


### 3000 உறவினர்கள் .....

மடுவில் தங்கியுள்ள இக்குழு வினர் இன்று மடுத் தேவாலயத் தில் இடம்பெறவுள்ள சமய நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பின் ஏ.ஈ.நாணயக்கார உட்பட ஒன்பது பேர் புலிகளின் கட்டுப் பாட்டு பிரதேசமான வன்னிக்குச் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று சந்திக்கவுள்ளனர். ஏனையோர் இன்றே தென்பகுதிக்குத்திரும்புவர்.

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிக்கு செல்லவுள்ள இந்த ஒன்பதுபேரும் தென்பகுதியில் இருந்து கொண்டுசென்ற பாட சாலை உபகரணங்கள் மற்றும் உடுப்புவகைகள் பிளாஸ்ரிக் பொருட்களை அங்குள்ள மாண வர்களுக்கு வழங்குவார்கள்.

(வ)


## பதவி வெற்றிடம்

பாதுகாப்பு உத்தியோகஸ்தர் பதவிக்கு ஆட்தேவை. க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடைந்த 35 வயதிற்கு மேற்பட்ட உடல் ஆரோக்கியமானவர்கள் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

*நிர்வாக முகாமையாளர்*

வலம்புரி
இல.15,
வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.


### வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்த

# முஸ்லிம் மக்களின் நிலை குறித்து பேச புலிகளின் தலைவர் பிரபாவை சந்திப்பேன்

### அமைச்சர் நூர்டீன்மசூர் தெரிவிப்பு

(வவுனியா)

இடம்பெயர்ந்து வாழும் வடபகுதி முஸ்லிம்மக்களை மீளவும் வடபகுதிகளில் குடியமர்த்துவதற்கு வன்னி சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபா கரனை சந்திப்பதற்கு நடவ டிக்கை எடுத்துள்ளேன் என்று வன்னிப்புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன்மசூர் முஸ்லிம்மக்கள் அளித்த வரவேற்பின் போது கூறியுள்ளார்.


வவுனியா மகாரம்பைக்குளம் மதீனா நகரில் இவ்வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது.

அங்கு அவர் தொடர்ந்து பேசுகையில்,

தமிழ் மக்களின் விடுதலைப்போரட்டத்திற்கு முஸ்லிம் மக்கள் எச்சந்ர்ப்பத் திலும் தீங்குவிளைவித்தது கிடையாது. இதனை வன்னிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபா கரனுக்கு தெரிவிக்க வுள்ளேன் இந் நாட்டின் இவ் சமாதானம் நிகழுவுவதற்கு நாம் என்றும் எதிரானவர்கள் அல்ல என்றும் அவர் கூறினார்

(வ)

## விழாக் காட்சிகள்



உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலையின் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படம். படத்தில் பாடசாலை அதிபர் மு.விக்கினேஸ்வரன் உரையாற்றுவதையும் விழாவில் கலந்து கொண்ட பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும் காணலாம்.


## கண்ணீர் அஞ்சலி



### அமரர் A.V.மயில்வாகனம்

*(ஓய்வுபெற்ற கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர்.)*

அமரத்துவம்:- 19.01.2002

எமது கல்லூரியின் பழையமாணவனும்,
முன்னாள் ஆசிரியரும்,
பாடசாலை பழையமாணவர் சங்கம் பாடசாலை
அபிவிருத்திச்சங்கம் ஆகியவற்றின் முன்னணி உறுப்பினரும்,
எமது கல்லூரியின் பரிசளிப்பு நினைவுநிதி பங்காளருமாகிய அன்னாரின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி, அவர்களின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

*கல்லூரிச் சமூகம்*
*யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.*

4269


### யுத்த நிறுத்தம்...

கடந்தவருடம் டிசம்பர் மாதம் 24ம் திகதிமுதல் அமுலுக்கு கொண்டு வந்த யுத்தநிறுத்தம் இம்மாதம் 24ம் திகதியுடன் முடிவடைய இருப்பதால் அதனை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடித்துள்ளோம்.

சமாதான நல்லெண்ணத்தை உலகிற்கு உணர்த்தும் வகையில் நீடிக்கப்பட்ட யுத்த நிறுத்தம் பெப்ரவரி மாதம் 24ம் திகதி வரை அமுல்படுத்தப்படும் இதேவேளை நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை நடைமுறைப்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை தயாரிப் பதில் விடுதலைப் புலிகள் ஈடுபட் டுள்ளனர்.

யுத்தநிறுத்தம் நீடிக்கப்பட்டுள்ள அறிவிப்பை எமது அரசியல் அலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நோர்வே அரசின் மூலம் இலங்கை அரசிற்கு அறிவித்துள்ளார் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது (வ)



யாழ் உயர் தொழில் நுட்பநிறுவன இயக்குனர், விரிவுரையாளர்கள் யாழ்உயர் தொழில்நுட்ப மற்றும் மாணவப்பிரதிநிகள், இந்து கலாச்சார அமைச்சரின் இல்லத்தில் அமைச்சர் தி.மகேஸ்வரன், மற்றும் பிரதமர் ரணில்விக்கரமசிங்கவின் அந்தரங்கசெயலாளர் சமன்அத்தா ஆகியோரை சந்தித்த போது எடுத்த படம்.

### வவுனியா..

தாம் தரைப்பாதையில் உள்ள மிதிவெடிகளை அகற்று உதவுவதாக கண்ணி வெடி அகற்றும் பிரிவினர் உறுதியளித துள்ளனர்.

முதற்கட்டமாக பாதுகாப்பு படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தாண்டிக்குளம் முதல் ஓமந்தை வரையான பிரதேசத்தி லுள்ள நெடுஞ்சாலை முதலில் புனரமைப்பு செய்யப்படும் என்றும்,விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கிளிநொச்சி முதல் முல்லைத்தீவு வரையான பிரதேசத்திலுள்ள நெடுஞ் சாலைகள் பின்னர் புனரமைக் கப்படும் என்றும் வவுனியா புனர்வாழ்வு புனரமைப்பு அதி காரசபை தெரிவித்துள்ளது.

இதேவேளை 17வருடகாலமாக மூடப்பட்டிருக்கும் இப்பாதையை திறப்பதற்கு விடுதலைப் புலிகள் சம்மதித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது (இ)



## உடன் தேவை

### கணனி பக்க அமைப்பாளர்
### COMPUTER PAGE MAKER

உடன் தேவை
அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும்.

*நிர்வாக முகாமையாளர்*

'வலம்புரி'
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

நலலை ஆதன கலாமனற திறபபுவிழா அணமையில நடைபெறறபோது நல்லை ஆதீனமுதல்வரின் ஆசியுடன் மூத்தசட்டத்தரணி கனகரட்ணம் மங்களவிளக்கை ஏற்றிவைப்பதை படத்தில் காணலாம்.







யாழ் வீரசிங்க மண்டபத் திறப்புவிழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது நல்லைஆதீனமுதல்வர் மாவட்ட கூ.அ.சபைத்தலைவர் பெ.கனகசபாபதி யாழ் அரசஅதிபர் க.சண்முகநாதன் மேலதி அரச அதிபர் து.வைத்திலிங்கம் கூ.அ.உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி உட்பட கூட்டுறவுச் சங்கப்பிரமுகர்கள் மேடையில் அமர்ந்திருப்பதை முதலாவது படத்திலும், யாழ் அரசஅதிபர் உரையாற்றுவதை இரண்டாவது படத்திலும், நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

### குடியேற்றக்காரர்
## இத்தாலி ரோம் நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி

(ரோம்)
இத்தாலியில் சட்டவிரோதமாக குடியேறியுள்ள குடியேற்ற வாசிகளை அந்நாட்டு அரசாங்கம் ஒடுக்கும் திட்டங்கள் செயற்பாடுகளைஆட்சேபித்து பாதிக்கப்படும் ஆயிரக்கணக்கனவர்கள்ரோம்நகரில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றினை நடத்தியுள்ளார்கள்.

சுமார் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்ட இப்பேரணியில் 'தாம் வாழ்வதற்கு எல்லைகளற்ற உலகம் வேண்டும், என்ற கோரிக்கையும் விடுக்கப்பட்டது.

இத்தாலியில் சட்டவிரோதமாக3இலட்சம் பேர் குடியேறியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-8)

### ஆப்கானிய மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் அனுப்ப
## தலாங்குகை மீண்டும் திறப்பு

(புதுடில்லி)
இந்து குஷ்மலைப்பிரதேசத்தில் அமைந்திருக்கும் தலாங்குகையை ஆப்கான், ரஷ்யத் தலைவர்கள்மீண்டும் திறந்துள்ளனர்.

உலகில் மிகவும் உயரமான பகுதியின் பனிப்படலங்களினால்மூடப்பட்டுள்ளஇக்குகை கடல்மட்டத்திலிருந்து சுமார் 3 ஆயிரத்து 363 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளதோடு 2 மைல் நீளமும் உடையது.

1956 ஆம் ஆண்டுக்கும் 1964 ஆம் ஆண்டுக்கும்இடையில் கட்டப்பட்ட இக்குகை வழியாக பசியாலும் பட்டினியாலும் வாடும்ஆப்கானியமக்களுக்குஉணவுப்பொருட்களையும் ஏனைய அத்தியாவசியப் பொருள்களையும் ரஷ்யா அனுப்பி வைக்கவுள்ளது.

தலிபான் இயக்கத்துக்குஎதிராக முஸ்லிம் கிளர்ச்சியாளர்களினால் நடத்தப்பட்ட போரின் போது கிளர்ச்சியாளர்கள் இக்குகையின்வாயிலில் போர் புரிந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பலஸ்தீன வானொலி நிலையங்கள் மீது தாக்கு

(ஜெருசலேம்)
பலஸ்தீன வானொலி நிலையங்களை இஸ்ரேலிய துருப்புகள் தாக்கி அழித்துள்ளன.

பலஸ்தீனத்தின் மேற்கு கரையோரமாக உள்ள இராமல்லா நகரில் அமைந்துள்ள வானொலி நிலையம் உட்பட மற்றும் பல தொலைக்காட்சி நிலையங்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை பலஸ்தீன தீவிரவாதிகள் இஸ்ரேலியரைச் சுட்டுக்கொன்றதையடுத்தே பழிவாங்கும் நோக்குடன் இந்நிலையங்கள் தகர்க்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

பலஸ்தீன வானொலியும் தொலைக்காட்சியும் இஸ்ரேல் எதிர்ப்பு பிரசுரங்களை வெளியிடுவதில் முன்னின்று பாடுபடுவதாக இஸ்ரேல் குற்றஞ்சாட்டி வருவதும் குறிப்பிடத்தக்கது. (து)

## அவுஸ்திரேலிய அகதி முகாமில் பலரும் உண்ணாவிரதம்

(சிட்னி)
சட்டவிரோத குடியேற்றக்காரர்களின் உண்ணா விரதத்துக்கு எதிராக நிலையான கொள்கையைக் கடைப்பிடிக்கப்போவதாக அவுஸ்திரேலிய அரசு உறுதிபூண்டுள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றவாசிகளின் முகாம்கள் பல அவுஸ்ரேலியாவில் உள்ளன.

இவற்றில் பெரிய முகாமொன்றில் உள்ள 58 ற்கு மேற் பட்டோர் தங்களுக்கு விசாவழங்குவதில்காலதாமதமாவதைக்கண்டித்துஉண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

உண்ணாவிரதங்களில் பலர் வாய்களை தைத்துக்கொண்டு உண்ணாவிரதப்போராட்டம் நடத்துகிறார்கள்.

இதே வேளைஉண்ணா விரதிகள் பலர்காவல்துறையினர் மீது கற்களை வீசியதாகவும் பொலிஸார் அவர்களை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தகாவும் செய்திகள்தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக அவுஸ்திரேலிய குடிவரவுஅதிகாரி ஒருவர் கருத்துத்தெரிவிக்கையில்

அகதிகளின்எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எமது விசாவழங்கும் திட்டத்தை எந்தவிதத்திலும் பாதிக்காது என்றார். (து)

### அமெரிக்காவின்
## சமாதான போதனையும் ஆயுதவிற்பனையும்

(வாஷிங்டன்)
இந்தியாவும் பாகிஸ்தானும் தமக்கிடையே பதற்றத்தைக் குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தி வரும் அமெரிக்கா அண்மையில் இந்தியாவுடன் ஆயுத விற்பனை பற்றிய ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

அமெரிக்கப் பாது காப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்டும், வாஷிங்டனுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியப் பாது காப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் சும் மேற்படி ஒப்பந்தத்தில்கைச்சாத்திட்டுள்ளதாகத்தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அமெரிக்கப் பாது காப்பு அமைச்சர்கருத்துத்தெரிவிக்கையில், அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்குமிடையில் பாரியளவில் இராணுவத் தொழில் நுட்பப் பரிமாற்றம் ஏற்படும் என்று குறிப்பிட்டார்.

எதிர்வரும் நாட்களில் உலகின் இரு பெரும் ஜனநாயக நாடுகளும் பயங்கர வாதம் உட்படபலமுக்கியவிடயங்கள் குறித்து ஆராயவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் இந்தியா, அமெரிக்காஇராணுவத்துடன் ஒத்துழைப்பதற்கும் இராணுவத்தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கும் ஆர்வமாக உள்ளதாகத் தெரிவித்துள்ளார். (எ)

## வவுனியா அகதி முகாமுக்கு அமைச்சர் நூர்டீன் விஜயம்

(வவுனியா)
வவுனியாவிற்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள வன்னி புனர்வாழ்வு அமைச்சர் நூர்டீன்மசூர், நேற்று வவுனியா பூந்தோட்டத்தில் உள்ள அகதிகள் முகாமிற்கு சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

சுமார் ஒன்பதாயிரம் பேர் தங்கியுள்ள அம் முகாமில் போதிய அடிப்படை வசதிகள் மருத்துவ வசதிகள் இல்லையெனவும், கடந்த மூன்று மாத காலமாக உலர் உணவுப் பொருட்கள் எவையும் வழங்கப்பட வில்லையெனவும் அமைச்சரிடம் அங்கு தங்கியிருப்பவர்களால் தெரிவிக்கப்பட்டது.

நிலைமைகளை கேட்டறிந்த அமைச்சர் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் மேற்படி முகாம்களில் இருப்பவர்கள் தங்குவதற்கு வசதியாக வீடுகள் அமைத்துக் கொடுப்பதாகவும் உறுதியளித்தார்.

இதேவேளை வவுனியா கல்வியியல் கல்லூரிக்கும் விஜயத்தை மேற் கொண்ட அமைச்சர் அங்கு கல்லூரி பீடாதிபதியுடன் பேச்சுக்களை நடத்தியிருந்தார் (இ-4)

# உலக தரிசனம்

## இந்திய சிறுவர்களுக்கு அதி உயர் விருது!

(புதுடில்லி)
ஜம்மு-காஷ்மீரில் தீவிரவாதிகளுடன் யுத்தம் புரிந்து அவர்களை விரட்டி அடித்த இந்திய சிறுவர்களுக்கு இந்தியஅரசின் அதிஉயர்விருது வழங்கப்படுகிறது.

கடந்த 1999 ஆம் ஆண்டு ஜூலை மாதம் தமது கிராமத்தைத் தாக்கி 15 பேரைக் கொன்று குவித்த தீவிர வாதிகளை எதிர்த்தசிறுவர்களான சுகில்சிங் அமர்லாசிங் என்போருக்கு இந்த உயர் விருது வழங்கப்படுகிறது.

இதேவேளையில்இந்த ஆண்டிற்கான விருதுகளை 25 சிறுவர்கள் பெற உள்ளார்கள். இதில் 12 பேர் வீரச்செயல் புரிந்த சிறுமிகள்என்பதுகுறிப்பிடத்தக்கது. (து)

## தேர்தல் காரியாலயங்களில் மலையக தமிழர்களையும் பணியில் அமர்த்தவேண்டும்

(கொழும்பு)
இந்தியவம்சாவளி இலங்கை வாழ் மலையகத் தமிழர்களையும் தேர்தல் காரியாலயங்களில் உத்தியோகஸ்தர் பணிகளில் நியமிக்குமாறு தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சரும், மலையக முன்னணியின் தலைவருமான சந்திரசேகரன் உள்நாட்டு அலுவல்கள், உள்ளூராட்சி மாகாண சபை அமைச்சர் அலிக் அலுவிகாரவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழர்கள் செறிந்துவாழும் பகுதி தேர்தல் காரியாலயங்களில் தமிழ் உத்தியோகஸ்தர்கள் இல்லாத காரணத்நால் வாக்காளர்களின் பெயர்கள் பிழையாகப் பதியப்படுவதுடன், ஆண் வாக்காளர்களின் பெயர்கள் பெண் வாக்காளர் பட்டியலிலும், பெண் வாக்காளர்களின் பெயர்கள் ஆண் வாக்காளர் பட்டியலிலும் பதியப்படுகின்றன.

இதனால் தேர்தல் காலங்களில் பல சிரமங்களை தமிழ் வாக்காளர்கள் அனுபவிப்பதோடு சிலவேளைகளில் தேர்தலில் வாக்களிக்க முடியாத நிலையும் உருவாகுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-8)

## ஹொங்கோ நாட்டு மக்கள் றுவாண்டாவில் தஞ்சம்

(றுவாண்டா)
கடந்த வியாழக் கிழமை ஹொங்கோவில் எரிமலைகள் வெடித்துள்ளதையடுத்து பீதியுற்ற பல்லாயிரக்கணக்கான ஹொங்கோ மக்கள் றுவாண்டா நாட்டிற்குத் தப்பியோடியுள்ளனர்.

இதனால் நிலைமையைச் சமாளிக்க முடியாத றுவாண்டா அரசு அவசர அவசரமாகப் பல முகாம்களை அமைத்து மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவு, தண்ணீர், உடை, இருப்பிடம் போன்ற வற்றை வழங்கி வருகிறது.

இதே வேளை, ஹோமா நகரில் எரிமலைக் குழம்புகள் வெளிக்கிளம்பிக் கொண்டிருப்பதால் நகரில் நீர் விநியோகம் மின்சாரம் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. (து)

## உயர்தொழில்நுட்பநிறுவன தேர்வுநடைபெறும்திகதிகள்

(சண்டிலிப்பாய்)
யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன 4-ஆம் வருட மாணவர்களுக்கான தேசிய கணக்கியல் டிப்ளோமா (HNDA), 2ஆம் வருட மாணவர்களுக்கான தேசிய ஆங்கில டிப்ளோமா (NDE) ஆகிய பாடநெறிகளுக்கான பரீட்சைகள் எதிர் வரும் பெப்ரவரி மாதம் 18, 19, 20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இதேவேளை பழையபாடத்திட்டத்தின்படி 2 ஆம், 3ஆம் வருட மாணவர்களுக்கான உயர்தேசிய முகாமைத்துவ டிப்ளோமா HNDC), தேசிய வியாபார கற்கைநெறி டிப்ளோமா (NDBS), தேசிய வியாபார நிதியிடல் டிப்ளோமா (NDBE), உயர் தேசிய கணக்கியல்டிப்ளோமா (HNDA), உயர் தேசிய வர்த்தக டிப்ளோமா ஆகிய பாடநெறிகளுக்கான பரீட்சைகள் எதிர் வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ளதாகவும் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார். (செ-125)

### பயங்கரவாதத்திற்கு எதிரான
## பாக். அதிபரின் செயற்பாடுகளில் பாதுகாப்பு அமைச்சர் அதிருப்தி

(வாஷிங்டன்)
பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் பெர்வேஷ் முஷாரப் பயங்கரவாதத்துக் கெதிராக உரைகளை நிகழ்த்தி வருகின்ற போதிலும் செயலில் எந்த மாற்றமும் இடம்பெறவில்லையென்று இந்தியப் பாதுகாப்புஅமைச்சர்ஜோர்ச் பெர்னான்டஸ் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் தொலைக்காட்சி நிறுவனத்துக்குப் பேட்டியளித்த இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், இந்தியா தேடும் 20 பயங்கரவாதிகளில் ஒருவரைத்தானும் பாகிஸ்தான் ஒப்படைக்கவில்லையென்றும்,

இந்தியா அமைதியை விரும்புவதால்தான் எல்லைப்புறங்களில் படைகளை நிறுத்திய போதும் இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது என்றும் குறிப்பிட்டார். (து)

வடக்கு-கிழக்கு மாகாண

# தபால் சேவகர்களின் சலுகைகள் உரிமைகளை வழங்க கோரிக்கை

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் தபால் சேவகர்களுக்கு அவர்களுடைய சலுகைகள் உரிமைகளை வழங்க வேண்டும் எனக்கோரி தபால் திணைக்கள உயர் அதிகாரிகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

தபால் சேவகர்களுக்கு சீருடை, தொப்பி, சப்பாத்து, தபால்பை, மழைக்கவசம் என்பன வழங்கப்படுகின்றன.

ஆனால் பாதுகாப்பு காரணங்களைச் சாட்டாகவைத்து இவை வடக்கு- கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் தமிழ் தபால் சேவகர்களுக்கு கடந்த பல வருடங்களாக வழங்கப்படவில்லை.

மேற்படி மாகாணத்தில் கடமையாற்றும் சிங்கள ஊழியர்களுக்கு இவை வழமை போன்று வழங்கப்படுகின்றன.

புதிய அரசாங்கம் பதவியேற்ற பின்னர் பாதுகாப்புடன் தொடர்புடைய பல நடவடிக்கைகளில் தளர்வு ஏற்பட்டுள்ள போதிலும் இது விடயத்தில் அக்கறை காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# சிறையிலுள்ள முஸ்லிம் இளைஞர்யுவதிகள் விசனம்

(மட்டக்களப்பு)

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள முஸ்லிம் இளைஞர் யுவதிகளின் விடுதலை தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனமெடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அண்மையில் களுத்துறைச் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தமட்டக்களப்புமாவட்ட முதன்மைப் பாராளுமன்ற உறுப்பினர் தங்கவடிவேலிடம் முஸ்லிம் கைதிகள் இது தொடர்பாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசின் பங்காளிகளாகவும் அமைச்சர்களாகவும் பிரதியமைச்சர்களாகவும் விளங்குகின்றனர்.

எனினும் சிறைச்சாலையில் அநியாயமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் விடுதலை தொடர்பாக கவனம் எடுப்பதில்லை.

நாட்டின் பல்வேறு சிறைச்சாலைகளில் ஆண்களும், பெண்களுமாக பல முஸ்லிம்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அப்பாவிகளான இவர்களின் கைது மற்றும் தடுத்து வைப்புத் தொடர்பாக முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கரிசனை இல்லாது இருப்பது வேதனை தருவதாக உள்ளதென இவர்கள் தெரிவித்துள்ளனர் (உ)

# போதைப்பொருள் கடத்திய அரச பணியாளர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை வைத்திருந்த அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பாணாந்துறை விசேட நடவடிக்கை பொலிஸ் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையிலேயே தெகிவளைப் பகுதியில் வைத்து இவர் கைது செய்யப்பட்டார்.

இந்நபர் பல வருடங்களாக இப்போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் (உ-8)

# மழையினால் பயிர்கள் நாசம் மனமுடைந்த விவசாயி மரணத்தை தழுவினார்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் பெய்த மழை காரணமாக தனது விவசாயப் பயிர் அழிவடைந்ததால் மனமுடைந்த இளம் விவசாயி நஞ்சருந்தி தனது உயிரைமாய்த்துக்கொண்டார்.

கரணவாய்- மத்தி, கரவெட்டியில் இடம்பெற்ற இச் சம்பவத்தில்ஐயாத்துரை.மணிவண்ணன் (வயது 29) எனும் இளம் விவசாயியே தனது உயிரை மாய்த்துக் கொண்டவராவார். (உ-4)

# தோட்டத் தொழிலார் யூனியன் ஜே. வி. பி. மீது சீற்றம்

(கொழும்பு)

சிறுபான்மையின மக்களின் உரிமைகளைச் சீர்குலைக்கும் வகையில் ஜே·வி.பி செயற்படுவதாக லங்கா தோட்டத் தொழிலாளர் யூனியன் கண்டித்துள்ளது.

இனப் பிரச்சினைக்குத் தீர்வொன்றைக் காண்பதற்காக அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளை குழப்பும் வகையில் ஜே.வி.பி.செயற்படுகின்றது.

இந் நாட்டில் புரையோடிப் போயிருக்கும் பிரச்சினைக்குத்தீர்வுகாணப்படுவது அவசியமாகும்.

கடந்தகாலங்களில் இநாட்டை ஆண்ட ஐ.தே.கட்சியும் ஸ்ரீ.சு.கட்சியும் சுயநல அரசியல் காரணங்களுக்காக போட்டி போட்டுக் கொண்டு இப் பிரச்சினையை இழுத்தடித்ததன் காரணமாகவேஇந் நாட்டில் பெரும் யுத்தம் தோன்றி முழு நாடுமே சீரழிவுக்கு ள்ளானதுஎன்றுஅக்கட்சி மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (உ)

# பாஸ்கரலிங்கம் நாடு திரும்பினார்: முக்கிய பதவி வழங்கப்படலாம்?

(கொழும்பு

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் ஆர் பாஸ்கரலிங்கம் இலண்டனிலிருந்து நாடு திரும்பியுள்ளார்.

1994 ஆம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சியமைத்தபோது பாஸ்கரலிங்கம் உட்பட மேலும் பலர் நிதிமோசடிகளில் ஈடுபட்டதாகக் கூறி, அவர்கள் மீது விசாரணைக் குழுக்கள் ஊடாக விசாரணைகளை மேற்கொண்ட போது இவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.

மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி அமைத்திருப்பதனால் முக்கியமான பதவிகளில் பாஸ்கரலிங்கம் பதவி வகிக்கலாம் என்பதோடு அவர் அதற்காகவே நாடு திரும்பியுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கின்றன (உ-8)

# பிளாஸ்ரிக் அறுவை சிகிச்சைக்கு பதியலாம்

(யாழ்ப்பாணம்)

இங்கிலாந்தைச் சேர்ந்த பிளாஸ்ரிக் சத்திரசிகிச்சைநிபுணர் குழு ஒன்று எதிர்வரும் மாதம் 12 ஆம் திகதி யாழ்ப்பாணம் விஜயம செய்யவுள்ளதால்,

உதடு,மூக்குசத்திரசிகிச்சை தீக்காயங்கள் போன்றவற்றால் ஏற்பட்ட தழும்புகள் அடையாளங்கள் என்பவற்றுக்கான பிளாஸ்டிக் சத்திரசிகிச்சைக்கு உட்பட விரும்புபவர்கள் தமது விபரங்களை யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் பதிவு செய்யும்படி அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# பரிசளிப்பு விழா

(உரும்பிராய்)

உரும்பிராய் வள்ளுவர் அக்கடமியின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நிறுவன இயக்குநர் செல்வி மயில்வாகனம் கேதீஸ்வரி தலைமையில் நடைபெற்றது

இந் நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றது. (இ

# யுவதியின்பற்களை உடைத்த இளைஞருக்கு 4 வருட கடூழியச் சிறைத் தண்டனை

(கொழும்பு)

இளம் யுவதியின் இரு பற்களைஉடைத்துக்காயம் விளைவித்ததாகக் குற்றம்சாட்டப்பட்ட தென்பகுதி இளைஞருக்கு நீர்கொழும்பு நீதிவான் 5 வருடங்களுக்கு ஒத்தி வைக்கப்பட்ட நான்கு வருட கடூழியச் சிறைத் தண்டனைவிதித்துள்ளார்.

அத்துடன் அந்த யுவதிக்கு3 ஆயிரம் ரூபாவை நட்ட ஈடாகச் செலுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார். (உ)

# முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்து போட்டியிடவுள்ளதாக கட்சியின் தலைவர் ரவூப்ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார் அதில் -

முஸ்லிம் மக்களின் தனித்துவமான கட்சியாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விளங்குகிறது

எனவே முஸ்லிம் மக்களின் தனித்துவத்தையும், உரிமையையும் பாதுகாக்கும் வகையில் எமதுகட்சி உள்ளூர் ஆட்சித்தேர்தலில் தனித்தே போட்டியிடவுள்ளது.

இவ்வகையில் தேர்தலுக்காக தற்போது வேட்பாளர் தெரிவும் இடம் பெறுகிறது. எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ 4)

# வடக்கு-கிழக்கு மாகாண கல்வியமைச்சின் மந்த செயற்பாடுகுறித்துஅதிருப்தி

(மட்டக்களப்பு)

வடகிழக்கு மாகாண கல்வியமைச்சின் மந்தமான செயற்பாடுகள் குறித்து மட்டக்களப்பு பிரதேச ஆசிரியர்கள் குறைகேள் அதிகாரியிடம் முறையிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பிரதேச ஆசிரியர்களின் பதவி உயர்வுகள் வலயக்கல்வி அலுவலகத்தினால் சிபார்சு செய்யப்பட்டு மாகாணக் கல்வி அலுவலகத்திற்கும், அங்கிருந்து மாகாணக் கல்வியமைச்சு அலுவலகத்திற்கும் முன்னிலைப்படுத்தப்படுவது வழக்கம்.

எனினும், பல மாதங்கள் கடந்த போதிலும் வடகிழக்கு மாகாணக் கல்வியமைச்சு அலுவலகத்தில் இருந்து ஆசிரியர்களுக்கான பதவி உயர்வுக் கடிதங்களோ பதில்களோ கிடைக்கப்பெறுவதில்லைஎனவும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (உ)


சிறுவர் கழக இணையத்தின்

## கட்டுரைப் போட்டி முடிவுகள்

ஐக்கிய இராச்சிய சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட சிறுவர் கழகங்களின் இணையம் சர்வதேச சிறுவர் தினத்தை ஒட்டி நடாத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள்:

**கீழ்ப்பிரிவு**

1ம் இடம்: யாழினி கணேசலிங்கம்
யா-வட இந்து மகளிர் கல்லூரி,
பருத்தித்துறை.
2ம் இடம்:- வி. சாரதாஜினி
யா-கன்னியர் மட மகா வித்தியாலயம்.
3ம் இடம்:- மு. வேணுகானன்
யா-உடுப்பிட்டி அ. மி. கல்லூரி
வல்வெட்டித்துறை.

**மத்திய பிரிவு**

1ம் இடம்;- வெள்ளியங்கிரிநாதன் கோகுலன்
யா-இந்துக்கல்லூரி
2ம் இடம்:- ம. தர்மா
யா-கரம்பொன் சிறிய புஷ்ப மகளிர் ம. வி.
3ம் இடம்:- மு. அறிவரசி
யா-வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

**மேல்பிரிவு**

1ம் இடம்;- பிரதா முருகையா
யா-இந்து மகளிர் கல்லூரி
2ம் இடம்:- ஜீ. டிலானி பவித்திரா
யா-வைத்தீஸ்வரக் கல்லூரி
3ம் இடம்: கிருஷ்ணசாமி சுகர்ணா
யா-மானிப்பாய் மகளிர் கல்லூரி.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா எதிர்வரும் 26-01-2002 அன்று புதியநேரம் காலை 9.30 மணியளவில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டிய மாணவ மாணவிகளை கலந்து கொண்டு பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

குறிப்பு:- ஓவியப் போட்டிகளின் முடிவுகள் ஏற்கனவே வெளியாகியுள்ளதால் வெற்றி பெற்றவர்கள் பரிசில்களை அன்றைதினம் பெற்றுக்கொள்ளலாம்.

**இணைய செயலாளர்,**
146, கோவில் வீதி,
நல்லூர்.

(கி-3313)

## இன்று ஒரு தகவல்

# கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

அரசன் ஒருவன் உலா வரும்பொழுது வயலில்வேலை செய்துகொண்டிருந்த அழகான இளம்பெண் ஒருத்தியைக் கண்டான். காதல் கொண்ட அவன் அவளையே திருமணம் செய்துகொள்வது என்று முடிவு செய்தான். தன் தூதர்களை அவளிடம் அனுப்பி ஒப்புதல் கேட்டான். 'ஏதேனும் தொழில் தெரிந்த ஒருவரைத்தான் நான் திருமணம் செய்து கொள்வேன். உங்கள் அரசருக்கு என்ன தொழில் தெரியும்? சொல்லுங்கள் திருமணத்திற்கு உடன்படுகின்றேன். இல்லாவிட்டால்போய்வாருங்கள்' என்று தூதர்களிடம் சொன்னாள் அந்தப்பெண். ஏமாற்றத்துடன் திரும்பிய தூதர்கள் நடந்ததை அரசனிடம் சொன்னார்கள். அவளை மறக்கமுடியாத அவன், 'மிகக் குறுகிய காலத்தில் நான் எந்தத் தொழிலைக் கற்றுக்கொள்ள முடியும் சொல்லுங்கள்' என்றான்.

மூன்றே வாரத்தில் பாய் நெய்யும் தொழிலைக் கற்றுக்கொள்ளலாம் என்றான் ஓர் அமைச்சன். அமைச்சன்குறிப்பிட்ட காலத்திற்குள் பாய் பின்னும் கலையில் வல்லுநன் ஆனான் அரசன். ஒரு நல்ல நாளில் அரசனுக்கும் அந்தப் பெண்ணுக்கும் சீரும் சிறப்புமாகத் திருமணம் நடந்தது. ஆண்டுகள் உருண்டோடின. அரசி அவனைப்பார்த்து 'நம்நாட்டு மக்கள் எப்படி இருக்கின்றனர் என்பதை அறிந்து அவர்களுக்குத் தேவையான நல்லதைச் செய்வதே அரசனின் கடமை. மக்கள் மகிழ்ச்சியாக இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. எங்கோ ஏதோ கொடுமை நடந்துகொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. நீங்கள் மாறுவேடத்தில் சென்று அதை அறியவேண்டும்' என்றாள். 'நான் இல்லாத நேரத்தில் நீயே அரசாட்சியைக் கவனித்துக் கொள்' என்று மனைவியிடம் சொல்லிவிட்டு மாறுவேடத்தில் புறப்பட்டான் அரசன். பக்கத்து நகரத்தை அடைந்த அவன், இங்கே எனக்கு வேலை தருவார் யாரும் உண்டா? என்று கேட்டான்.

அங்கே வந்த முதியவர் ''என்னுடன் வா. உனக்கு வேலை தருகிறேன்'' என்று அவனை அழைத்துச் சென்றார். பெரிய பாழடைந்த மாளிகையில் அவனை சிறை வைத்த பெரியவர் ''இங்கு என்னால் வஞ்சகமாகப் பிடித்து வரப்பட்டபலர் இருக்கின்றனர். தங்கள் உழைப்பால் உருவாக்கிய பொருளை என்னிடம் தருவார்கள். நான் அதை விற்றுப் பத்தில் ஒரு பங்கிற்கு உணவு வாங்கி வருவேன். அதைக் கொண்டு உயிர் வாழ வேண்டும். தொழில் ஏதும் தெரியாவிட்டால் இங்கேயே பட்டினி கிடந்து சாகவேண்டும். இங்கு வந்த யாரும் வெளியே சென்றதில்லை. உனக்கு என்ன தொழில் தெரியும் சொல் அதற்கு வேண்டிய பொருட்களை வாங்கி வருகிறேன் என்று கடுமையாகச் சொன்னார் அவர்.

அங்கிருந்தவர்கள் எல்லோரும் எலும்பும் தோலுமாக இருப்பதைக் கண்டு, தெரியாமல் வந்து இந்த ஆபத்தில் சிக்கிக் கொண்டோமே,என்று வருந்தினான் அரசன். ஏதோ சிந்தித்த அவன், ''எனக்கு மிக அழகாகப் பாய்முடையத் தெரியும் அதற்குத் தேவையான பொருள்களைக் கொண்டு வா. உன்னை விரைவில் பெருஞ் செல்வனாக்குகிறேன்'' என்றான். முதியவனும் வேண்டிய எல்லாப் பொருள்களையும் கொண்டு வந்தான். மிக அழகாகப் பாயைப் பின்னிய அவன் முதியவனிடம் தந்தான். ''இந்தப் பாயின் அருமை யாருக்கும் தெரியாது. குறைந்த விலைக்கு யாரிடமாவதுவிற்றுவிடாதே. நேராக அரசியாரிடம் எடுத்துச் செல். அவர்கள் இந்தப் பாயைப் பிரித்து இதன் அழகைப் பார்த்துவிட்டார்களானால் உன் கனவிலும் எதிர்பாராத சிறப்பு உனக்குக் கிடைக்கும்'' என்று அழகாகப் பேசினான்.

முதியவன் இந்தப் பாயை எடுத்துச்சென்று அரசியிடம் தந்தான். அதைப் பிரித்துப் பார்த்த அரசி அதிர்ச்சி அடைந்தாள். அந்தப் பாயில் அவள் கணவன் அவர்கள் இருவருக்கும் மட்டும் தெரிந்த மொழியில் ''தான் சிறைப் பட்டிருக்கும் இடத்தையும், பாயைக் கொண்டுவரும் முதியவனே கொள்ளையர் தலைவன்'' என்றும்விரிவாக எழுதியிருந்தான். உண்மை அறிந்த அரசி அந்த முதியவனைச் சிறை வைக்குமாறு கட்டளையிட்டாள். வீரர்கள்பலருடன் பக்கத்து நகரத்துக்கு வந்த அவள் தன் கணவரையும், மற்றவர்களையும் சிறை மீட்டாள். தலைநகர் திரும்பிய அரசன் தன் மனைவியைக் கட்டித் தழுவிக்கொண்டான், ''நீ மட்டும் அரசனாக இருந்தால் என்ன ஏதேனும் தொழில் தெரிந்தவனைத் தான் திருமணம் செய்து கொள்வேன் என்று சொல்லாமலிருந்தால் இந்நேரம் நானும் இறந்திருப்பேன். என் நாட்டு மக்களையும் கொடுமையிலிருந்து காப்பாற்றியிருக்க முடியாது'' என்றான். கொடியவனான முதியவனுக்கு அரசன் தூக்குத் தண்டனை விதித்தான்.

பேராசிரியர் எ. சோதி

## வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சி

# தேர்தலை ஒத்திவைக்குமாறு கூட்டமைப்பினர் மீண்டும் கோருவர்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்குமாறு கூட்டமைப்பினர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து மீண்டும் வலியுறுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் பிரதமரை பாராளுமன்றத்தில் சந்தித்த கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஆர். சம்பந்தன், கஜேந்திரகுமார் ஆகியோர் மேற்படி தேர்தல் இடம் பெறும் பட்சத்தில் சமாதான முயற்சிகளுக்கு குந்தகமாய் அமையும் எனவும்,

அதனைஒத்திவைக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தமை தெரிந்ததே.

இருப்பினும்,வடக்கு-கிழக்கு உள்ளடங்கலாக உள்ளூராட்சித் தேர்தல் இடம் பெறுவது உறுதி செய்யப்பட்டு வேட்புமனுத் தாக்கல் தினங்களும் நிர்ணயம்செய்யப்பட்டநிலையில் கூட்டமைப்பினர் மீண்டும் தமது கோரிக்கையை வலியுறுத்தவுள்ளதாய் தெரிய வருகிறது. (உ)

# தேர்தல் ஆயத்தங்கள் யாழ்.நகரிலும் மும்முரம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான நியமனப்பத்திரம் தாக்கல் செய்யும் திகதி அறிவிக்கப்பட்டதையடுத்து யாழ்ப்பாணத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கான ஆயத்தங்களில் இறங்கியுள்ளன.

கடந்த பொதுத் தேர்தலின் போது அமைக்கப்பட்டநான்கு கட்சிகளின் கூட்டமைப்புஉள்ளூராட்சித் தேர்தலுக்கும் பொருந்துமா என்று அக்கட்சிகள் மத்தியில் பெருங்கேள்விக்குறியாக உள்ளது.

தற்போது பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைப் பதவியில் உள்ள ஒரு சிலர் பிரதேசசபை, மாநகர சபை ஆகியவற்றுக்கு போட்டியிட முயன்றுவருகின்றனர். இதேவேளையில், பெரும்பான்மை இனக்கட்சிகளும், அபேட்சகர்களை நிறுத்த தயாராகி வருவதாகவும்,அந்தந்தப் பிரதேசங்களில் உள்ளவர்களே அந்தந்த பிரதேசசபை, நகரசபை, மாநகரசபைத் தேர்தலில் போட்டி இடவேண்டும் என்றும் அப் பிரதேச மக்கள் மத்தியில் பரவலாக பேசப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது. (வ)

# இல.பணிப்பெண்களின் பிரச்சினை பற்றி ஆராயும் குழு லெபனான் பயணம்

(கொழும்பு)

லெபனானில்பணியாற்றும் இலங்கைப் பணிப்பெண்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான விபரங்களைத் திரட்டுவதற்காக வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கவின் பணிப்பின் பேரில் விசேட பிரதிநிகள்குழுவொன்று விரைவில் லெபனான் செல்லவுள்ளது.

இப் பிரதிநிதிகள் லெபனான் அரசுப் பிரதிநிதிகள், இலங்கை ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் முகாம்களில் இருக்கும்இலங்கையர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

இதேவேளை,துபாயில் சப்நோனர் ஆடைத்தொழிற்சாலையில் பணியாற்றிய இலங்கைத் தொழிலாளர்கள் 123பேரை இயன்றளவில் விரைவில் இலங்கைக்கு அழைத்துவருமாறும்தொழில் அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இவர்களின் விசா காலாவதியாகியுள்ளமையே இதற்குக் காரணமாகும். (உ)

# முட்டை விலை சரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் முட்டையின் விலைவிரைவாக வீழ்ச்சி அடைந்து வருகிறது.

08ரூபாவிலிருந்து 10ரூபா வரை விற்கப்பட்ட முட்டை தற்போது 6 ரூபா வரையில் விற்கப்படுகிறது.

கோழிப் பண்ணை வைத்திருப்பவர்கள் முட்டையின் விலை சரிவால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-124)

# குறைந்த கட்டணத்தில் இலங்கையர்க்குவிமானசீட்டு

## அமைச்சர் மகிந்த அமரசிங்க தகவல்

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புத்தேடி செல்லும் இலங்கையர்களுக்கான விமானப் பயணச் சீட்டினை குறைந்த கட்டணத்தில் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாக வேலை வாய்ப்பு, தொழில் அமைச்சர் மகிந்த அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து செல்லும் வழியில் துபாயில் தங்கியிருந்த போது செய்தியாளர்கள் மத்தியில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்; தான் ஏற்கனவே இது சம்பந்தமாக ஸ்ரீ லங்கா எயர்லைன்ஸ் விமான நிலையத்துடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் விரைவில் இது நடைமுறைப்படுத்தப் படும் என்றும் தெரிவித்தார். (க-8)

# பெண்களுக்கான எல்லே போட்டி

(ஏழாலை)

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் இன்று திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கில் பெண்களுக்கான எல்லே போட்டி நடைபெறவுள்ளது.

இதில் மூன்றுவிளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றவுள்ளன. (செ-12)

# யாழ்ப்பாணம் விரையும் வெளிநாட்டுத் தமிழர்

(யாழ்ப்பாணம்)

நாட்டின் தற்போதைய அமைதி நிலையை பயன்படுத்தி வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் யாழ்ப்பாணம் நோக்கி படையெடுத்து வருகின்றனர்.

ஐரோப்பிய நாடுகள் மற்றும் கனடா போன்ற நாடுகளில் தங்கி உள்ளவர்களே இவ்வாறு இலங்கை நோக்கிப் படையெடுககின்றனர். அதிகமானோர் யாழ்ப்பாணம் வருகை புரிகின்றனர்.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான தற்போதைய சுமுகமான நிலைமை மேலும் விரிவடைந்து நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்பட்டு யாழ்.கொழும்பு பிரதான பாதை திறக்கப்படுமாயின் இவ்வரவு மேலும் அதிகரிக்கும் என்றும் நம்பிக்கை வெளியிடப்படுகிறது. (க-124)

# மட்டக்களப்பு நகரில் மூடப்பட்டிருந்த வீதிகள் மீண்டும் திறக்கப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்புநகரில் கடந்த ஐந்து வருடங்களாக மூடப்பட்டிருந்த வீதிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமைமுதல் போக்குவரத்துக்காக திறந்து விடப்பட்டுள்ளன.

புகையிரத நிலைய வீதி, திருமலை வீதி ஆகிய வீதிகளே மீண்டும் பொதுமக்களின் போக்குவரத்திற்காக திறந்து விடப்பட்டுள்ளன.

இதேவேளை மேலும் பல முக்கிய வீதிகள் இன்னமும் முற்றாகத் திறந்து விடப்படவில்லை.

அத்துடன் மாநகர சபைக் கட்டடம், இந்து இளைஞர் மன்றம், பொதுசேவையாளர் கிளப், ஊள்ளூராட்சி உதவி ஆணையாளர் கட்டடம் போன்ற பல பொதுக்கட்டடங்கள் இன்னமும் படையினரின் பயன்பாட்டிலேயே உள்ளன. (செ)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணை ஸ்ரீ மத்வாலாம்பிகாச மேத ஸ்ரீ வைத்தீஸ்வரசுவாமி தேவஸ்தானத்தின் புனராவர்த்தனபிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 27 ஆம் திகதி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

பிரதிஷ்டா பிரதம குருவாக மேற்படி தேவஸ்தான சிவாச்சாரியர் சிவஸ்ரீ சோ. இ. பிரணதார்த்திஹரக் குருக்கள் கும்பாபிஷேக கிரியைகளை நடத்துவார். (எ)

## சிந்தனைக்கு விருந்து

### அழிவுக்கு அறிகுறிகள்

வாகனங்க ளின்நெரிசல் வீதிகளிற் குண்டுகுழி
வேகமிக ஓட்டுகின்ற ஓட்டுநர்கள் - போகும்
வழிமறித்துப்' பரலல்' ஆய்ச்'சைக்கிள்' செல்வோர்
அழிவழிவிற் கறிகுறிக ளாம்

'பழையவன்'

# உலகளாவிய ரீதியில் இலங்கை ஓவியங்கள்: யாழ்ப்பாணம் இத்துறையில் பின்னடைவு

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள சிங்கள ஓவியக் கலைஞரான குசல் நந்தனவுடன் இடம் பெற்ற உரையாடலின் முக்கிய பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் என்பது பழமொழி. சித்திரம் என்பது வெறுமனே கட்புலத்திற்கு மட்டும் விருந்தளிக்கக் கூடிய கலை வடிவமல்ல அது உருவாக்குபவனது சமூக, கலாசார, பண்பாட்டுத் தளங்களை அடியொற்றியதாக அப்போதுள்ள மன நிலையைப் பிரதிபலிப்பதாக காலத்தின் கண்ணாடியாகக் கூட அமைந்து விடும்' அதனின் உயிரோட்டம் அதன் வாழ் நாளைத் தீர்மானிக்கும் பேச்சு மூச்சற்று ஒரு தாளில் கிறுக்கப்படும் சில கோடுகள் கூட பல அர்த்தங்களை பல சங்கதிகளை உணர்த்துவனவாய் அமைந்து விடும்.

**ஓவியக்கலை**

இன்று யாழ்ப்பாணத்தில் ஏனைய துறைகளைப் போல ஓவியத்துறை பெரு வளர்ச்சி காணவில்லை, இங்குள்ளவர்களுக்கு ஓவிய அறிவு பற்றிய ஆற்றலும் அக்கறையும் மிகக் மிகக் குறைவாக உள்ளதே இதற்கான காரணம் எனலாம். இதேவேளை யாழில் ஓவியக் கூடங்களோ ஓவியப் பயிற்சி வழங்கும் நிறுவனங்களோ பெரிய அளவில் வளர்ச்சியும் பெறவில்லை.

இதே வேளை சிங்கள மக்ளிடையே ஓவியக்கலை செழித்து வளர்ந்து வருகிறது. ஓவியக் கண்காட்சிகள் அங்கு அடிக்கடி ஒழுங்கு செய்யப்படுகின்றன. ஊக்குவிப்புக்களும் வசதிகளும் அங்கு பெருகி வருவதோடு புகழ் பெற்ற ஓவியர்களும் உருவாகிவருகின்றனர்.

இந் நேரத்தில் யாழ். திருமறைக்கலா மன்றத்தின் ஏற்பாட்டில் ஓவியப்பட்டறை ஒன்றை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்துள்ள இளம் ஓவியரான குசல் நந்தனவைச் சந்தித்துஉரையாடிய;போது அவர் வெளியிட்ட கருத்துகளைப் பார்ப்போம்.

**ஓவியர் குசல்நந்தன**

27 வயதான குசல் நந்தன ராகமவைச் சேர்ந்தவர். கருணாரத்ன மகாவித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை மேற் கொண்ட அவர்நான்கு வருடகாலமாக விபவி நுண்கலைக் கழகத்தில் வர்ணம் பூசுதல் மற்றும் கைவேலை பயிற்சி நெறியினை மேற்கொண்டுள்ளார். சிறு வயது முதலே சித்திரம் வரைவதில் தனக்குஆர்வம் இருந்ததாகக் கூறும் அவர் பத்திரிகைவிளம்பரத்தைப் பார்த்து 'விபவி' தனியார் கல்வி நிறுவனத்தில் இணைந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

தனது குருவான சந்திரகுப்ததேநுவரவிடம் பெரு மதிப்பு வைத்திருக்கும் குசல், ஒரு வருடகாலம் ஒன்றைப்

நேர்கண்டு உரையாடியவர்

**எம்.எஸ்.எஸ் கீர்த்தி**

பார்த்து வரைதல் பயிற்சியையும் பின்னர் மனித உடலைப் பாகம் பிரித்து வரையும் பயிற்சியையும் மேற்கொண்டிருந்தார்.

**சமாதானப் பிரியன்**

யுத்தத்திற்கு எதிராக பிரசாரம் மேற்கொள்வதில் முன்னின்ற இக் கலைஞர் தனது ஓவியங்கள் மூலம் மேற்படி கருத்தியலை முன்னிறுத்தி கண்காட்சிகளையும் நடத்தியிருந்தார். கொழும்பு புகையிரதநிலையம் முன்பாக சமாதானத்தை வலியுறுத்தி மேற்கொள்ளப்பட்ட போராட்டங்களிலும் இவரின் ஓவியங்கள் பெரும் பங்கு வகித்ததை புகைப்பட அல்பங்கள் மூலம் அறிய முடிகின்றது. இவரின் ஓவியக் கண்காட்சிகள் திருமறைக் கலா மன்ற அனுசரணையுடனும் கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் விபவி கலாசார மையத்தில் தனியானஓவியக் காட்சியாகவும்நடைபெற்றுள்ளன.

**அக்கடமியில்**

பாடசாலையில் தாம் கற்ற காலத்தில் அங்கு சித்திரதிற்கு உரிய இடம் கொடுக்கப்படவில்லை என்று கூறும் குசல் வீட்டில் சிறிது முயற்சி எடுத்ததன் விளைவாக மாவட்டரீதியில் நடைபெற்ற போட்டிகளில்சான்றிதழ் பெற்றதாகக் கூறுகின்றார். ஜகத் வீரசிங்க சோமரத்ன,கருணாசிறிவிஜயசிங்க ஆகிய ஆசிரியர்கள் அக்கடமியில் கற்பித்ததாகவும் அங்கு பயிலும் காலத்தில் ஓவியர்மார்க்பற்றி யாழ்ப்பாணத்தவர் மூலமாக அறிந்து கொண்டதாகவும் சனாதனன் போன்றவர்களை தாம் அங்கு சந்தித்ததாகவும் கூறும் அவர் இங்கு ஓவியத்துறை சம்பந்தமாகமாணவர்களிடையே ஆர்வம் இருப்பதாகவும் ஆனால் அவர்களுக்கு கைகொடுத்து உதவ எவருமில்லையே என ஏக்கத்தை வெளியிட்டார்.

அந்த வகையில் வடக்கு-தெற்கு பாலம் நிகழ்வுகளின் ஊடாக திருமறைக்கலா மன்றம் ஆற்றும் தொண்டை நான்பாராட்டுகிறேன். ஆட்சி மாறிய பின்பும் யாழ்ப்பாண மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர் கொள்வதை என்னால் உணர முடிகிறது. தெற்கில் இருந்து நாம் கற்பனை மூலம் வரையும் ஓவியங்களை விட அதை அனுபவித்த மக்கள் மூலம் வெளிவரும் படைப்புகளே உச்சமாக இருக்கும் என நான் நம்புகிறேன் என்றார்.

இப் பட்டறையில் கலந்து கொள்ளும் எமது இளம் பிள்ளைகளுக்கு என்ன கூற விரும்புகிறீர்கள் எனக் கேட்ட போது,

ஒருவர் ஓவியராக வரவிரும்பினால் தன்னை முழுமையாக அத்துறைக்காக அர்ப்பணிக்க வேண்டும். காலம் நேரம் பாராது பயிற்சியில் ஈடுபட வேண்டும். பல்கலைக்கழகத்தில் இத்துறையில் சான்றிதழ் பெற்று விட்டால் ஓவியராக வந்துவிடலாம் என்று எண்ணக் கூடாது. சித்திரம்வாய்ச் சொல்லில் அல்ல கைப்பழக்கத்திலேயே தங்கியுள்ளது. சித்திரங்களால் மனித வாழ்க்கையை மாற்ற முடியும், உள்ளத்திலுள்ள துன்பத்தை அகற்ற முடியும். மனதில் உள்ளதை பென்சில் முனை மூலம் வெளிக் கொணரும் கலையே இது என்று நீண்ட விளக்கம் தந்தார்.

உடற் கூற்றியல் அம்சங்களை தனது வெற்றிக்காகப் பயன்படுத்தி வரும் இவர் எதிர்வரும் காலங்களில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் ஓவியங்கள் தீட்டுவதற்கு திடசங்கற்பம்பூண்டுள்ளார்.

**ஆவணப்படுத்தல் அவசியம்**

ஓவியத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியதன் மூலம் வித்தியாசமான வரலாறு படைத்த உலகப்புகழ் பெற்ற ஓவியர்களான போல் செசான், பைப்லோ பிக்காசோ, ஹென்றி மத்தியூஸ், வின்சன் மாங்கோ போன்றோர் எந்த நுட்பத்தையும்விட்டு வைக்கவில்லை. அதனால் எமக்கென்று எந்த புதிய வடிவத்தையும் உருவாக்கிவிட முடியாது என்று கூறும் கலைஞர் குசல் நவீன ஓவியங்கள் நோக்குங் கணத்தே கருத்தைப் புலப்படவைப்பதில்லை என்றும் தாம் இராணுவ பாதணியை ஆக்கிரமிப்பின் ஒரு குறியீடாகவைத்து அதை பிரமாண்டமாக்கியதாகவும் சொன்னார்.

ஆசியாவில் இலங்கைஓவியத்துறையில் வளர்ச்சி கண்டுள்ளது. உலகளாவிய ரீதியில் இலங்கை ஓவியங்கள் விலை பேசப்படுகின்றன. ஆனால் இந்தியா, நேபாளம், பங்களாதேஷ் போன்ற நாடுகளில்உள்ளது போன்று இங்கு ஓவியவரலாறு ஆவணப்படுத்தப்படவில்லை. அதனால் பல பெறுமதியான ஓவியங்கள் அழிந்துவிட்டன. இனியாவது அரசுகள் இது விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும் என்று தனது ஆதங்கத்தை வெளியிட்ட ஓவியக்கலைஞரை வாழ்த்தி விடை பெறும்போது குசலால் வரையப்பட்டு வெளிநாட்டவர் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்ட மோனாலிச தோற்றமொன்றை நண்பர் சொலமன் எனக்குக் காட்டினார்.

இவ்வாறான கலைஞர்களின் வருகையை ஊக்குவித்து அதன் வாயிலாக எம் கலைகளும் செழுமைபெற உழைப்பது அனைவரினதும் தலையாய கடமையாகும். □

## இராசி பலன்

21.1.2002
(தை 8, திங்கள்)
சப்தமி காலை 7.56 வரை
அச்சுவினி முழுவதும்
ராகுகாலம் 8.05 - 9.35
நல்லநேரம் 12.35-2.05
சித்தம்

**மேடம்**
ஜனவசியம், காரியம் கைகூடும், நல்ல முயற்சி, சயன சுகம்.

**இடபம்**
பிரயாணம், சுபசெலவு, சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம்.

**மிதுனம்**
காரிய அனுகூலம், தனலாபம், உறவினர் வருகை, கௌரவம்.

**கடகம்**
தொழில் சிறப்பு, அதிகாரம், முயற்சி கைகூடும், உற்சாகம்.

**சிங்கம்**
பிரயாணம், கட்டுப்பாடு, புதிய தொழில்சிந்தை, வீண் பயம்.

**கன்னி**
காரிய தடங்கல், பிரயாண பயம், உடல் வியாதி, போசன சுகம்.

**துலாம்**
பிரயாண நன்மை, காரிய அனுகூலம், போசனசுகம், தன வரவு.

**விருச்சிகம்**
காரியநன்மை, சத்துரு ஜெயம், ஆரோக்கிய நிலை, தொழில் விருத்தி.

**தனுசு**
குடும்பக்கவலை, முயற்சி தாமதம், தாழ்ந்த சுபாவம், வியாபார நன்மை.

**மகரம்**
உடல்சோர்வு, முயற்சிதாமதம், ரோகபயம், மனச்சஞ்சலம்.

**கும்பம்**
காரிய நன்மை, குடும்ப மகிழ்ச்சி, தனவரவு, அன்னியர் சந்திப்பு.

**மீனம்**
வீண் செலவு, முயற்சி தாமதம், வாக்கு கலகம், மாதர் நட்பு.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## அச்சுவேலிச் சந்தையில் தரகர் கெடுபிடி

(அச்சுவேலி)

அச்சுவேலி பொதுச்சந்தையில் தரகர் கெடுபிடி அதிகரித்து வருவது குறித்து விவசாயிகள் தரப்பில்பெரிதும்கவலை தெரிவிக்கப்படுகிறது.

பல நாட்கள்பாடுபட்டு தாம் சந்தைக்கு எடுத்துச் செல்லும் விளை பொருட்களை, தரகர்களென கூறிக் கொள்வோர் மோசடிகள் புரிந்துதாம் இலாபமீட்டி வருவதாகவும்,

இதனால் அவர்கள் ஒரு நொடியில் பெரும் தொகைப் பணத்தை உழைத்துச்செல்ல, பாடுபட்ட தாம் ஏமாற்றத்துடன் திரும்பும் நிலை காணப்படுவதாகவும், கவலையுடன் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன், விற்பனைக்கு எடுத்துச் செல்லும் பொருட்களை நிறுப்பதிலும் நேர்மையாக நடந்து கொள்வதில்லை எனவும்,

சந்தைக் குத்தகைக்காரர் தான் தோன்றித் தனமாக எடுக்கும் முடிவுகளை அமுல் படுத்திவருவதாகவும் மேலும் தெரிவிக்கின்றனர்.

(உ)

## மது விற்பனை நிலையம் இயங்க தடை உத்தரவு

(மந்திகை)

ஆவரங்கால் பகுதியில் மதுபான விற்பனை அனுமதிப் பத்திரம் இன்றி இயங்கிய மதுபான விற்பனை நிலையத்தினை இயங்குவதற்கு மதுவரி திணைக்கள அதிகாரிகள் தடை விதித்துள்ளனர்.

மதுவரி பரிசோதகர்கள் ஆவரங்கால் பகுதியில் மேற்கொண்ட திடீர்சோதனையின் போது உரிய முறையில் அனுமதிப்பத்திரம் பெறாது இம் மதுபானச் சாலை இயங்கி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகத்தெரிவிக்கப்படுகிறது.

(க-23)

## சமாதானத்துக்கு உதவும்குழு; யுத்த நிறுத்த முயற்சிகளுக்கு வரவேற்பு

(கொழும்பு)

நோர்வேயின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் யுத்த நிறுத்த முயற்சிகளை, சமாதானத்துக்கு உதவும்குழு வரவேற்றுள்ளதுடன் தமது கருத்துக்களை முன்வைத்து அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது.

யுத்த நிறுத்தம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மனிதவுரிமைகள் மனிதாபிமானக் கருத்துக்கள் சேர்க்கப்படுவதனால் இவை இனப்பிரச்சினைத் தீர்வினை மேலும் முன்னெடுப்பதா அமையும்,

இவற்றினைத், தனித்து ஓர் புரிந்துணர்வுஒப்பந்தமாகஅரசும்புலிகளும்செய்துசமாதான நடைமுறைகளுக்கு உத்வேகம் அளிக்க வேண்டும்எனவும்அவ்வமைப்பு வேண்டுகோள்விடுத்துள்ளது.

(உ)

## வயோதிபர் படுகாயம்

(மந்திகை)

வீட்டு வாசலில் இருந்த வயோதிபர் ஒருவரை வேகமாக வந்த உழவு இயந்திரம் மோதியதில் பலத்த காயமடைந்த சம்பவம்வல்வெட்டித்துறையில்கடந்த 18ஆம்திகதி இடம் பெற்றது.

படுகாயமடைந்தவயோதிபர் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை கம்பர் மலையைச் சேர்ந்தநாகமுத்து கணபதிப்பிள்ளை(வயது-70) என்பவரே காயமடைந்தவராவார்.

(க-23)

## கடற்தொழிலாளர் வங்கி வேலணையில்

(வண்ணார்பண்ணை)

வேலணை அம்பிகை நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு 'இதிவர' கடற்றொழிலாளர் வங்கி அமைப்பதற்கான அங்கீகாரம் கிடைக்கப்பட்டதைத் தொடர்ந்து இவ் வங்கிக்கான கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இதற்கென கடற்றொழில் நீரியல்வள அமைச்சினால் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா அண்மையில் வழங்கப்பட்டது.

(உ-109)

# விடுதலைப்புலிகள் மீதானதடையை அவசரப்பட்டு நீக்குவது ஆபத்தானது

## புலிகளின்கோரிக்கைக்குஆப்புவைக்கபார்க்கிறார்சந்திரிகா

(கொழும்பு)

வன்னி சென்ற பத்திரிகையாளர்களிடம் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தம்மீதான தடை நீக்கப்பட்டால் மாத்திரமே பேச்சுவார்த்தை மேசைக்கு வர முடியும் என்று வலியுறுத்தியுள்ளமை தொடர்பாக இதுவரை எந்தவொரு கருத்தையும் வெளியிடாத நிலையில்,

இது குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை விரைவில் சந்தித்துப் பேச்சு



வார்த்தை நடத்தவுள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க செய்திச் சேவை ஒன்றுக்கு அளித்த பேட்டியில்தெரிவித்துள்ளார்.

அபபேட்டியில் அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்; விடுதலைப்புலிகள் மீதான தடையை அவசரப்பட்டு நீக்குவதுஆபத்தானது.

பேச்சுவார்த்தை மேசையில் அவர்கள் அமர்ந்த பின்பே இது குறித்து ஆராய வேண்டும் என்ற கருத்தைவலியுறுத்திக் கூறியுள்ளார்.

அத்துடன், புதிய அரசின் நடவடிக்கைகளில்நாட்டு மக்கள் நம்பிக்கை கொண்டிருக்கும்வரை ஐ.தே. முன்னணிக்கு எனது ஆதரவு தொடரும்.

விடுதலைப் புலிகளுடன் அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகள் குறித்து பெரியளவில் நம்பிக்கையில்லாது விட்டாலும் மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து சில தயாரிப்புக்களை மேற்கொள்ள வேண்டியகடப்பாடு உள்ளது.

இருப்பினும், நாட்டில் யுத்தமா சமாதானமாநிலைபெற வேண்டும் என்பதன் முடிவை சர்வ வல்லமை பொருந்திய ஜனாதிபதி என்ற வகையில் நானே எடுக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார். (உ)

## அமைச்சர் திஸாவுக்கு மீண்டும் சமுர்த்தி அமைச்சு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ். பி. திஸநாயக்காவுக்கு மீண்டும் சமுர்த்தி அமைச்சை வழங்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக நம்பிக்கை தெரிவிக்கப்படுகிறது.

விவசாயமற்றும் கால்நடை வளர்ப்பு அமைச்சராக தற்போது பதவி வகித்துவரும் அமைச்சர் திஸநாயக்காவுக்கு குறிப்பிட்ட அமைச்சுப்பதவி வழங்கக்கூடாது என்பதில் விடாப்பிடியாக நின்ற ஜனாதிபதி சந்திரிகா விஜய குமாரணதுங்க தற்பொழுது இவ் விடயத்திற்கு பச்சைக் கொடி காட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-வ)

## அச்சுவேலி நகர்ப்பகுதி கள்ளுத் தவறணையை அகற்றுமாறு உத்தரவு

(மந்திகை)

அச்சுவேலி நகர்ப்பகுதியில் இயங்கிய கள்ளுத் தவறணையை அகற்றுமாறு மதுவரித் திணைக்கள அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர்.

மேற்படி தவறணையை அகற்றுமாறு இப்பகுதி விவசாயிகள் மற்றும் பொது அமைப்புக்கள ஜனாதிபதி உட்பட பல அமைச்சர்களின் கவனத்தின்கீழ் கொண்டு வந்தனர்.

இதையடுத்து ஜனாதிபதியின் செயலாளர் இக் கள்ளுத் தவறணையை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு மதுவரித் திணைக்களத்திற்குப் பணிப்புரை விடுத்துள்ளதன் பேரில், மதுவரி உதவி ஆணையாளர் எஸ். சிவானந்தன் தலைமையிலான குழு இத்தடை உத்தரவினை பிறப்பித்துள்ளதுடன், மீறின் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-23)

## யாழ். ஆஸ்பத்திரியில் நீர் விநியோகம் சீரில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை நோயாளர்விடுதிகளுக்கான நீர்விநியோகம்சீரில்லை என நோயாளர் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகினறது.

குறிப்பிட்ட நேரங்களில் மட்டுமே நீர் விநியோகம் இடம்பெறுவதால் ஏனைய நேரங்களில் நோயாளர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் அவதியுறுவதையும் காணமுடிகின்றது. (உ 104)

## மீசாலை பகுதியில் விரைவில் மின்சாரம்

(மந்திகை)

மீசாலைப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் மின்சாரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள மேற்கொள்ளப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீசாலை-கொடிகாமம் வீதியில் உள்ள சேதமடைந்த மின்கம்பங்கள் அகற்றப்பட்டு புதிய மின்கம்பங்கள் நாட்டப்பட்டு வருகிறது.

அறுந்த மின்வயர்கள் மீண்டும் இணைக்கப்பட்டும் வருகின்றது.

கொடிகாமத்தில் உள்ள மின்பிறப்பாக்கி மூலம் மீசாலைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்பட உள்ளதாகவும் மேலும் அறியப்படுகிறது. (க-23)

## கசிப்பு வியாபாரம்செய்த பெண்களுக்கு தண்டனை

(மந்திகை)

சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தி செய்து விற்பனை செய்து வந்தமைதொடர்பாக வலிகாமப் பகுதியைச்சேர்ந்த ஆறு பெண்கள் உட்பட எட்டுப் பேருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி பா.பாலசுப்பிரமணியம் தண்டப்பணம் விதித்தார்.

மதுவரி திணைக்கள உதவிப் பொறுப்பதிகாரி இவ் வழக்கை மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்தார்.

கீழ்க்குறிப்பிடப்படுவோருக்கே தண்டப் பணம் அறவிடப்பட்டது. நவரத்தினம் இராசாத்தி (சுன்னாகம்) 2500 ரூபாவும், திருச்செல்வம் இராசமணி (கோண்டாவில்) 12ஆயிரம் ரூபாவும், கணபதிப்பிள்ளை அன்னம்மா (குப்பிளான்)12 ஆயிரம் ரூபாவும், ஆசைப்பிள்ளை நாகலிங்கம் (கோப்பாய்தெற்கு) 2ஆயிரத்து500 ரூபாவும், தவராசா மனோன்மணி ஆயிரம் ரூபாவும், தர்மகுலசிங்கம் பிறேமசீலன் 15 ஆயிரம் ரூபாவும், அருணன் இராசேந்திரம் 15 ஆயிரம் ரூபாவும், சந்திரன் இராஜேஸ்வரி 500 ரூபாவும் அபராதம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க-23)

## அழைப்பிதழ்அனுப்புவதை தீர்மானிப்பது அமைச்சரே

(வவுனியா)

அமைச்சர்கள் ஒரு பிரதேசத்திற்கு வருகைதரும் போது அவர்கள் கலந்து கொள்ளும் வைபவங்களுக்கு யாரை அழைப்பது என்பது பற்றி அவர்களே முடிவுசெய்கிறார்கள். அரச அதிபரோ. அரச அதிகாரிகளோ முடிவு செய்வதில்லைஎன்று வவுனியா அரசாங்க அதிபர் கே. கணேஷ் தெரிவித்துள்ளார்.

வன்னிக்குப் பொருள்களை அனுப்புவதற்கு அமைச்சர்கள் கலந்துகொண்ட வைபவத்திற்கான அழைப்பிதழ் தமக்கு வவுனியா அரசாங்க அதிபரால் அனுப்பப்படவில்லை என்று வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ள குற்றச்சாட்டு குறித்தே அவர் மேற்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

கூட்டத்திற்குப் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைப்பதா இல்லையா என்பதை அந்தந்த அமைச்சர்கள் எமக்கு தரும் கட்டளைகளுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கடந்த 15 ஆம் திகதி அமைச்சர்கள் வவுனியாவிற்கு விஜயம் செய்வது குறித்து 14 ஆம் திகதி மாலை தொலைபேசி மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டது. எழுத்து மூலம் அறிவிக்கப்படவில்லை.

அவர்களால் தரப்பட்ட அறிவுறுத்தல்களின்படியே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அத்தோடு எத்தகைய கூட்டங்களுக்கும் முன்னேற்பாடு செய்யப்படவில்லை.

கடந்த 7 வருடங்களாக வவுனியாவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் எதுவித் பாகுபாடுமின்றி கௌரவத்துடன் நடத்தப்பட்டார்கள் என்பதைவன்னி மாவட்டத்தைச் சேர்ந்த சிரேஷ்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் அறிவார்கள் என்று மேலும் அவர் தெரிவித்துள்ளார். (எ)

## புகைப்பிடிப்பதால் இலங்கையில் 20ஆயிரம்பேர் ஆண்டு தோறும் இறப்பு

(கொழும்பு)

புகைப்பிடித்தலால், வருடாந்தம் 20ஆயிரம்பேர் இலங்கையில் மரணமடைகின்றனர்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பிரதிப் பணிப்பாளர்கணதாசகமமே, இலங்கை மருத்துவ நிபுணர்களின் ஆய்வுகளின் இவ் அதிர்ச்சி தரும் தகவலை அண்மையில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் வெளியிட்டார்.

யுத்தத்தினால் இறப்பதை விட புகைப்பிடிப்பதனால் இறப்போர் தொகையே ஒவ்வோராண்டும் அதிகரித்து வருவதாகவும் அவர்தெரிவித்தார். (எ)

## அரச வாகனங்களுக்கு அரச இலச்சினை பொறிக்க ஆலோசனை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக் காலத்தில்அரச வாகனங்களை தமதுசொந்தப் பாவனைக்காக பயன்படுத்தியோரை இதுவரை காலமும் ரணில் அரசு தட்டிக் கேட்கத் தவறியமையினால் மக்களிடயே அதிருப்தி ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சியாளர்களின் இவ்வாறான தவறுகளினால் எதிர்வரும் காலங்களிலும் இவை போன்ற தவறுகள் ஏற்பட இடமுண்டு.

எனவே, இவ்வாகனங்கள் பயன் படுத்தப்பட்டமைக்கு எதிரான விசாரணைகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசவாகனங்கள் அனைத்திற்கும் அரச இலச்சினை பொறிக்கப்படுவது அவசியம் எனவும் சுட்டிக்காட்டினார்.

அதேநேரம் பொதுஜன ஐக்கிய முன்னணிஅரசின்ஆட்சியில் பயன்படுத்தப்பட்ட வாகனங்களில் பெரும்பாலனவை திரும்பி ஒப்படைக்கப் பட்டுவிட்டதாக அக்கட்சியின் செயலாளர் டி. எம். ஜெயரத்னா தெரிவித்துள்ளார். (உ-8)

## தேசிய பாதுகாப்பு நிதியை நீக்குக ஜே. வி. பி. கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் நோக்கில் எடுக்கப்பட்டுவரும் முயற்சிகள் வெற்றியீட்டிவரும் இச் சந்தர்ப்பத்தில், தேசிய பாதுகாப்பு நிதியை நீக்கவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமாரதிஸ்ஸ நாயக்கா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தேசிய பாதுகாப்பு நிதி நீக்குவது தொடர்பான திட்டத்தை அரசாங்கத்தின் முதலாவது வரவு செலவுத் திட்ட விவாதத்தில் முன்வைக்கப் போவதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இனப்பிரச்சினைத் தீர்வுத்திட்டம் நம்பிக்கைக்குரியதானால் தேசிய பாதுகாப்பு வரி அவசியமற்றது எனவும் தெரிவித்துள்ளார். (உ-8)

## நோயாளர் அவஸ்தை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வார்ட்டுகளில் பலத்த இடநெருக்கடி ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் படுப்பதற்கு வசதியின்றி அவஸ்தைப் படுவதாகத்தெரிவிக்கப்படுகிறது.

கட்டில் வசதி இல்லாமையால் நிலத்தில் நடை பாதை ஓரங்களில் நோயாளர் படுத்திருப்பதாகவும் இதனால் சுகாதாரச்சீர் கேடுகள்ஏற்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (எ-124)

## நிர்வாக சபைதெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைஊழியர் கடனுதவி கூட்டுறவுச் சங்கத்திற்கான நடப்பு வருட நிர்வாகசபைத் தெரிவு அண்மையில் யாழ். மாவட்டக் கூட்டுறவு உத்தியோகத்தர் நா. தவநாதன் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தலைவராக வெ. மார்வின் பெர்னாண்டோ, உபதலைவராகமா. நிக்சன்செயலாளராக இ. திருக்கருணை, உபசெயலாளராக பொ. பரமநாதன் பொருளாளராக க. மோகனரூபன் மற்றும் 10 நிர்வாக உறுப்பினர்கள்தெரிவுசெய்யப்பட்டனர். (உ)

* * *

அளவெட்டி முற்போக்கு வாலிபர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும்புதிய நிர்வாகசபைத்தெரிவும் அண்மையில் அளவெட்டி தெற்கு அருணாசலம் வித்தியாலயத்தில்நிலையத்தலைவர்இ. சிவநாயகம் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள்தெரிவில் தலைவராக இ. சிவநாயகம், செயலாளராக. ஜெயந்தினி, பொருளாளராக தெ. கயலின் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (உ-237)

# மனவளமும் உடல்நலனும் தரவல்லஇசையானது மனிதவாழ்க்கையோடு இணைந்த ஒன்றாகும்

**நீர்வைமணி**

**வா**ழ்வில் மனவளத்தைப் பொறுத்து உடல் நலனும், உடல் நலனைப் பொறுத்து மனவளமும்அமைவது இயல்பாகும். கவலைக்கு இடங்கொடேல், நோய்க்கு இடங்கொடேல் என்பது பழமொழிகளாகும். கவலைகளையும், நோயையும் நல்ல மன வளத்தினால் பெருமளவு குறைக்கலாம்.

மன வளமும், உடல் நலனும் சிறப்பாய் அமைவதற்கு இசை பெரும் பங்கு வகிக்கின்றது. இதனை நன்கறிந்தோரே 'இசையில் மயங்காத பேருமுண்டோ' எனப்பாடியுள்ளனர். சின்னஞ் சிறு மழலைகளைத் தூங்கவைப்பதற்குத் தாய்மார்தாலாட்டுப்பாடுவதே,வாழ்வில்இசையின் மகிமையை நன்கு உணர்த்துவதாகவுள்ளது.

நோய்க்கு அருமருந்து

நோயுற்றவர்கட்கு இனிய, நளினமான இசை நோய்தீர்க்கும் மருந்தாகின்றது மருத்துவ விஞ்ஞானிகள் பலரும் பெரும் ஆராய்ச்சிகள் மூலம் இசையின் ஆற்றலால் பல்வேறு நோய்களையும் குணப்படுத்தலாம் என்பதை நிரூபித்துள்ளனர். மென்மையான இனிய இசைகளின் மூலம் ஒருவருடைய இதயத்துடிப்பு, இரத்த அழுத்தம், நாடித்துடிப்பு என்பவற்றில் எவ்வளவோ மாற்றங்கள் ஏற்படுகின்றன.பல மருத்துவமனைகளிலும், சத்திரசிகிச்சைப் பகுதிகளிலும் இசைக் கருவிகள் பொருத்தப் பட்டிருப்பதும் நோயாளிகளின் மனவளஉடல் நலன் கருதியே யாகும்.

இசையும் சோதிடமும்

இசைக்கும் சோதிடத்திற்கும் கூட நெருங்கிய தொடர்புண்டு. இந்த தொடர்பு மிகவும் சிந்தனைக்குரியது. சங்கீதத்தில் வரும் ஸ, ரி, க, ம, ப, த, நி, எனும் ஏழு சுரங்களும் தனித்தனியே ஒவ்வொரு கிரகபலமும்: இராசிப் பலமும் உடையனவாகக் கருதப்படுகின்றன. இந்த விதத்திலே.

ஸ- சூரியன் சிம்மம்

ரி-புதன் மிதுனம், கன்னியாகவும்,

க- சனி மகர, கும்பம்,

ம- சுக்கிரன் இடபம் துலாம் ஆகவும்

ப- சந்திரன் கடகம்

த- செவ்வாய் மேடம் விருச்சிகம், ஆகவும்

நி- குரு தனுசு, மீனம் ஆகவும்.

கிரகபலம்உடையனவாகச் சுரங்கள அமைந்துசங்கீத ராகங்கட்கும். பலன்தருவனவாகவிளங்குகின்றன.கிரகங்களின் பலத்தைப் பார்த்தே சிலரை பாடகனாகவே, கலைஞனாகவே இருப்பர் என்பதை ஊகிக்க முடிகின்றது.

இசையின் மகத்துவம்

பண்டைய வேதங்களின் சாமவேதம் இசை வடிவானதாகவே விளங்குகின்றது. திருக்கயிலாய மலையைத் தூக்கிய இராவணேசன் சிவபிரானாற் தண்டிக்கப் பட்டதும். பின் சாமகானம் பாடியே இறைவனது திருவருளிற்கு ஆளானதும் வரலாறாகும்.

பெரிய மருத்துவமனைகளிலும் பிரசவ வார்ட்டுகளிலும் இசைக்கருவிகள் பொருத்தப்பட்டு, மெல்லிசைகள் மூலம் வலிகள் குணமாகவும், இயற்கையான சுகபிரசவம் நடைபெறவும் வழிசெய்துள்ளனர். பல்வேறு இசைக் கருவிகள் மூலமும், வாய்ப்பாடல்கள் மூலமும் மக்களை மெய்மறக்க வைக்க முடிகின்றது. தன்னை மறந்த நிலையில் இசையை ரசிப்பதன் மூலம் உடலுக்கும், உள்ளத்திற்கும், புத்துணர்வும், ஆபூர்வமான உற்சாகமும் ஊட்டப்படுகின்றது. சாதாரண வாழ்க்கையிலேயே இசையில் மயங்கிய பலபேர் ஆடுவதும், பாடுவதும், கூத்தாடுவதும், குதூகலிப்பதும் அன்றாடம் காண முடிகின்றது. இதிலிருந்து இசையின் மகத்துவத்தை நாம் நன்குணர முடிகின்றது.

பழமையும், புதுமையும்

பண்டைக் காலத்திலே புராணங்கள், இதிகாசங்கள் பல செய்யுள் (பாடல்) வடிவாகவே இருந்தன. இன்றும் இவை அரும் பொக்கிஷங்களாக பேணிப்பாதுகாக்கப் பட்டும், பயன்படுத்தப்பட்டும் வருகின்றன. பழம் பெரும் திருமுறைப்பாடல்கள் புராணச் செய்யுட்கள் பலவும் ஆழ்ந்து செறிந்து அரிய நற்கருத்துக்கள் மிக்கனவாகக் காலத்தால் அழியாத அறிவுப் பெட்டகங்களாக இன்றும் பாதுகாக்கப்படுகின்றன. பழையனவற்றை மூலமாகக் கொண்டே நவீன காலநாகரிக இசைகளும், இசைக்கருவிகளும் மக்கள் மத்தியில் இடம் பிடித்துள்ளன. இசைக் கலையைப் பற்றி ஆராயப் புகுந்தால் அதுவே எம்மை மயக்கி விடக்கூடியது. நமது அன்றாட வாழ்வில் பக்திப்பாடல்கள், சினிமாப்பாடல்கள், கிராமியப் பாடல்கள், இசைநடனங்கள், வாத்திய இசைகள் போன்ற பலவுமே ஒரு சில நேரங்களில் நம்மை நாம் உணராதிருக்கச் செய்து விடுகின்றன.

மனித வாழ்க்கையுடன் ஒன்றிணைந்த இசையின் சிறப்பை நாம் நன்குதெரிந்து, உணர்ந்து வழிக்கொள்வோமாயின் அது என்றும் எமக்கு நல்ல பயனடைத்ததாக இருக்கும். எனவே இசைக் கலைக்கும், இசைக் கலைஞருக்கும் நல்ல எதிர் காலத்தை வளர்த்து மனவளமும், உடல் நலனும் மிக்கவராக வாழ்வோமாக.

# புலிகளின் ஆலோசகர் பாலசிங்கம் இந்தியாவில் தங்க அனுமதிக்ககூடாது

## முன்னாள் மத்திய அமைச்சர் சிதம்பரம் கோரிக்கை

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாகசென்னையிலோ அல்லது பெங்களூரிலோ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தங்கியிருந்துபேச்சுவார்த்தை நடத்துவதற்கு அனுமதிக்குமாறு, விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையை, இந்திய மத்திய அரசு ஏற்கக்கூடாது.

இவ்வாறு காங்கிரஸ் ஜனநாயகப் பேரவையின தலைவரும், முன்னாள் மத்திய அமைச்சருமான ப. சிதம்பரம் நேற்று கோயம்புத்தூரில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

பேச்சுவார்த்தையைக் காரணம் காட்டி, அன்ரன் பாலசிங்கத்தை தென்னிந்தியாவில் தங்குவதற்கு அனுமதித்தால், அது விடுதலைப் புலிகளை தமிழ்நாடு உட்பட, இந்தியாவில் மீண்டும் துளிர்விடுவதற்கு வாய்ப்பளித்ததாகிவிடும்.

எனவே மத்திய அரசு இதுகுறித்து தீர்க்கமான ஒரு முடிவை வெளியிடுமென தான் நம்புவதாக அவர் கூறினார். (இ-5)


நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

## மூன்றாம் நாள்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று (21-01-2002) திங்கட்கிழமை நடைபெறும் நிகழ்ச்கள்;

**தலைவர்**
ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்

**ஆசியுரை**
பிரம்மஸ்ரீ சிதம்பர நாதக்குருக்கள் அவர்கள்

**மங்கல விளக்கேற்றல்**
உரிமையாளர் வி. எம். கே. ஜூவலர்ஸ்
305, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**மங்கல இசை**

| நாதஸ்வரம் | தவில் |
| --- | --- |
| திரு. ஆர். கேதீஸ்வரன் | திரு. என். ஜெயராமன் |
| திரு. பி. ரஜீந்திரன் | திரு. பி. ரவீந்திரன் |
| திரு. பி. விக்கினேஸ்வரன் | செல்வன் ரி. ஜெயக்குட்டி |
| | திரு. பொ. கணேசன் |

**வீணை இசை**
திருமதி ஜனனி நடேசமூர்த்தி அவர்களின் மாணவிகள்
சுதா மகாதேவன்
மஞ்சுசீதா சிதம்பரநாதன்
சுபாஷினி ஜெகந்நாதன்
கிருஷ்ணவானா சண்முகலிங்கம்
செல்வன் கே. கஜன் மிருதங்கம்

**நிருத்தியாஞ்சலி**
திருமதி ஸ்ரீ மோகனா பாலசுப்பிரமணியம் அவர்களின் நல்லை ஆதீன நடனப்பள்ளி மாணவர்கள்.

இன்றைய நிகழ்வுகள் சிறப்புற ஆதரவு வழங்குபவர்
**உரிமையாளர் வி எம்- கே- ஜூவலர்ஸ்**
305, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தற்போதைய முகவரி
303, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (கி-3312)


## இந்திய அரசு உதவ வேண்டும்

(கொழும்பு)

சமாதானப் பேச்சு வார்த்தைக்கு பொருத்தமான சூழலை உருவாக்க இந்திய அரசாங்கம் உதவவேண்டுமென்று கோரி, இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரசின் மாதர் அமைப்பு, இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய்க்கு கடிதமொன்றை அனுப்பி வைந்துள்ளது.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் நோர்வே உட்பட பல மேற்குலக நாடுகள் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன. இந்நிலையில் தெற்காசியாவின் முன்னணி ஜனநாயக நாடாகஉள்ள இந்தியா,இலங்கையின் சமாதான நடவடிக்கைக்கு உதவவேண்டிய பாரிய பொறுப்பையும் உரிமையையும் கொண்டிருக்கிறது என அக் கடிதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. (இ-4)

## இன்று

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று மூன்றாம் நாள் நிகழ்வுகள் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரம்மஸ்ரீ சிதம்பரநாதக்குருக்கள் ஆசியுரை நிகழ்த்துவார்.

மங்களஇசை, வீணைஇசை நிருத்தியாஞ்சலி ஆகிய நிகழ்வும் இடம்பெறும் (இ

# முணு முணுப்பு

இதைப்பாருங்களேன் அண்மையில் காரைநகரில் நடந்த தனது தந்தையின் மரணச் சடங்கில் கலந்துகொள்வதற்காக டென்மார்க்கிலிருக்கும் மகன் ஒருவர் செய்தி கேட்ட மூன்றாம்நாள் கொழும்புவந்துவிட்டார் இருந்தும் வந்தவர் தமிழர் தானே வழமையாக அரசபடைத்தரப்பு செல்வாக்குள்ளவர்களைத் தவிரஏனைய தமிழருக்கு விடப்படும் கெடு பிடி இவர்விடயத்திலும் தவறவில்லைதந்தையாரின்மரணச் சடங்குக்குஎவ்வளவு விரைவாக வந்து சேர முடியுமோ அதற்காக கூட்டுக் கட்சி அரசியல் பிரமுகரின் உதவியை நாடினார் ஐந்து நாட்களின் பின்பு ஒருமாதிரியாக பிளேனில் அவரும் ஆறு வயது மகனும் ஏற்றியாயிற்று அப்பாடா என்று சீற்றில் அமர்ந்து கொண்டனர்இரண்டு மூன்று நிமிடங்கள் கழித்து வந்ததேகேடு உமக்கு கிளியறன்ஸ் வரவில்லை எனவே பயணிக்க முடியாது என அவரையும் மகனையும் இறக்கி விட்டனர் என்னடா அநியாயம் இறந்த தந்தையை நினைத்து அழுவதா? ஏறிஇறங்கிய பயணத்தைப் பற்றிக் கவலைப்படுவதா? சிந்தித்த வண்ணம் தங்குமிடம் சென்றார்.

அடுத்த நாள் இன்னும்ஒரு அரசியல் வாதியின்உதவியை நாடினார் பயணம் கைகூடியது அன்றே காரைநகருக்கு வந்து சேர்ந்துவிட்டார்.

இதில்ஆச்சரியம் என்ன தெரியுமா என்னிடம்வராமல் அடுத்தவரிடம் சென்றதற்காகக் கிடைத்தபரிசே முதல் நாள தடைப்பட்ட பயணம் என்பதை அறிந்து கொண்டார்.

எப்படி யாழ்ப்பாணத்து அரசியல் வாதிகள்? வேறு விடயத்தில் ஏட்டிக்குப் போட்டியைக் காட்டினாலும் பரவாயில்லை மரண வீட்டிலுமா காட்ட வேண்டும் என அங்கலாய்த்தார் டென் மார்க்கை வதிவிடமாகக் கொண்ட காரைநகர்வாசி.

**தாம்பரத்தான்**


யாழ்ப்பாணம் வணிகர் கழகம்-
2002 ம் ஆண்டுப் பொதுக்கூட்டமும்,

## நிர்வாகசபைத் தெரிவும்

காலம் : 23 . 02 . 2002 சனிக்கிழமை,
நேரம் : பிற்பகல் 2. 00 மணி(இலங்கைநேரம்)
இடம் : யாழ். வணிகர் கழகப் பணிமனை

**அன்பான வேண்டுகோள்:**

1 ஆராய வேண்டிய விடயங்கள் இருப்பின் அங்கத்தவர்கள் தங்கள் விண்ணப்பத்தை 08 - 02 - 2002ற்கு முன் கழகப் பணிமனையில் சமர்ப்பிக்கவும்.

2) அங்கத்துவர்கள் மட்டுமே வாக்களிக்கவும், தெரிவில் இடம்பெறவும் அனுமதிக்கப் படுவார்கள்.

3) நிகழ்ச்சி நிரல் சகல அங்கத்தவர்களுக்கும் அனுப்பி வைக்கப்படும். சகல கழகஅங்கத்தவர்களும் தவறாது சமுகமளித்து வலுவான நிருவாக அமைப்பை ஏற்படுத்தி வளமான எதிர்காலம் அமைப்பீர்.

**யாழ்ப்பாண வணிகர் கழகம்.**

இல. 165, மானிப்பாய வீதி,
யாழ்ப்பாணம். (சி-3314)

எண்ணித்துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவாம் என்பது இழுக்கு

குறள்

## உண்மையை வெளிப்படுத்திய அமெ.தூதுவர்

இனப்பிரச்சினை விவகாரத்தில் சமாதானத்தை எட்ட விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார். இவ்வாறு இலங்கைக்கான அமெரிக்கத்தூதுவர் அஸ்லிவில்ஸ் கூறியுள்ளார், விடுதலைப் புலிகள் அமைப்பை தடை செய்த நாடுகளில் அமெரிக்காவும் ஒன்று. இருந்தும் அமெரிக்கத்தூதுவர் அஸ்லிவில்ஸ் உண்மை நிலைகளை வெளிப்படையாக கூறியுள்ளார். விடுதலைப்புலிகள் நல்லெண்ண அடிப்படையில் யுத்தநிறுத்தத்தை முதலில் அமுல்ப்படுத்தினார்கள் என்பதும் அதனைத் தொடர்ந்து அரசு மோதல் தவிர்ப்பை அமுல்ப்படுத்தியதென்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளார் எனத் தெரிவித்த வில்ஸ் சமாதான விடயத்தில் அரசு தரப்பு நிலைப்பாட்டையும் துலாம்பரமாக கூறியுள்ளார் ஜனாதிபதி சந்திரிகாகுமாரதுங்காவுக்கும் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவுக்கும் இடையே உள்ள புரிந்துணர்வற்ற தன்மையினால் சமாதானப் பேச்சுவார்த்தை பாதிப்படையலாமென்பதை அவர் ஒழிவு மறைவின்றி வெளிப்படுத்தியுள்ளார். அமெரிக்கத் தூதுவரின இக்கருத்து ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருந்த அமெரிக்கத்தூதுவர், தமிழர்களின் இனவிவகார விடயத்தில் கூறிய விடயங்கள், தமிழ் மக்கள் மத்தியில் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தும். அதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தமையும் தற்போது அதே அஸ்லிவில்ஸ் அரசின் நிலைப்பாட்டை உணர்ந்து கொண்டு அதை வெளிப்படுத்தி இருப்பதும் முக்கிய திருப்பம் என்றே கூற வேண்டும்.

சிங்கள பேரினவாதம் தமிழ் மக்களுக்கு ஒரு போதும் உரிமைகளை கொடுக்க முன்வராது என்ற நிலைப்பாட்டிலேயே விடுதலைப்புலிகள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர். புலிகளின் ஆயுதப் போராட்டமே தமிழ்இனத்தின் உரிமையை உணரவைத்துள்ளது. இந்நிலையில் உலகநாடுகள் தமிழ் மக்களின் உரிமையை வழங்குமாறு ஸ்ரீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுப்பதைவிடுத்து புலிகள் அமைப்பை தடை செய்வது அந்நாடுகளின் பொறுப்பற்று செயலாகவே உள்ளது.

இச்சந்தர்ப்பத்தில் அமெரிக்காவின் தூதுவர் அஸ்லிவில்ஸின் கருத்து புலிகளை தடைசெய்த நாடுகளுக்கு பலத்த அடியாகவே அமைந்துள்ளது.

## புத்தகப்பை பிள்ளைக்கு எமனாகலாம் கட்டடநிர்மாணத்திலும் கவனம் அவசியம்

அண்மையில் ஹொங்கொங் தேசத்தில் லீ கா கிற் என்ற பெயருடைய ஒன்பது வயது பாடசாலைச் சிறுவன் புத்தகப்பை ஒன்றினால் ஏற்பட்ட விபத்துக் காரணமாக அடுக்கு மாடி வீட்டுத் தொகுதியொன்றின் இருப தாவது மாடியிலிருந்து வீழ்ந்து மரணமாகியதாக வலம்புரியின் செய்தி வெளியாகியிருந்தது. எமது பகுதியிலும் இடநெருக்கடி காரணமாக பாடசாலைக்கட்டங்கள், வீடுகள் பல மாடிகளாக அமைக்கப்படுவதும், தலை நகரத்தில் எம்மவர் பலர் அடுக்குமாடி வீடுகளில் வசிப்பதுமான இக்கால கட்டத்தில் நாமும் இது பற்றிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

பத்திரிகை செய்தியை அடிப்படையாக வைத்து எனது ஊகப்படி துரதிர்ஷ்டம் மிக்க லீ கா கிற் எவ்வாறு வீழ்ந்து இறந்திருக்கக் கூடும்என்பதை படம் 1,2,3, இல் காட்டியுள்ளேன் அச் சிறுவனின் பாரமான புத்தகப்பை ஒருகை கொளுவப்படாமலோ அன்றி ஒரு பக்கவார் அறுந்ததாகவோ அன்றி ஒரு பக்க வாரிலுள்ள கொளுவி (BUCKLE) சீரற்றதாவோ அல்லது கழுத்தில் மட்டும் கொளுவக் கூடிய புத்தகப்பை ஒன்றகவோ இருந்திருக்கலாம். அப்புத்தகப்பையின் மொத்த நிறை ஏறத்தாழ நாலு கிலோக் கிராம் என செய்திகளில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இப் புத்தகப்பையுடன் சிறுவன் லீ கா கிற் கீழே எட்டிப் பார்த்த வேளையில் திடீரென ஒரு புறமாகச் சரிந்து முன் தொங்கிய புத்தகப்பையின் பாரத்தினால் நிலை தடுமாறி கீழே வீழ்ந்து இறந்திருக்கிறான்.

**எந்திரி சி.தயாபரன்**

கட்டிட நிர்மாண விதிகளின்படி படம். இல் X என்று காட்டப்பட்ட உயரம் யாழ்ப்பாணத்திலும் பெரும்பாலும் பேணப்படுகிறது. பாடசாலைகளில் பெரும்பாலும் பாதுகாப்பான கொங்கிறீற்று கைப்பிடிச்சுவர்களே அமைக்கப் படுகின்றன. ஹொங்கொங் போன்ற கட்டிட விதிகளை கடுமையாக அமுல்படுத்தும் நாடொன்றில் X இன் ஆகக் குறைந்த பாதுகாப்பு உயரம் பேணப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.


ஆனால் இப்விபத்துக்குக் காரணம் Y என்ற பகுதியே (அல்லது அது போன்ற ஒன்று) என பத்திரிகைகள்வாயிலாக ஊகிக்க முடிகிறது.

ஹொங்கொங், சிங்கப்பூர் போன்ற தேசங்களின் இடநெருக்கடிமிக்க அடுக்குமாடி வீடுகளில் இக் கைப்பிடிச் சுவர்களை ஒட்டி நடைபாதை மற்றும் பல்கனி போன்ற இடங்களில் பூச்சட்டிகள், உடைந்த தளபாடங்கள், காலணிகளை ஏனையோருக்கு இடையூறின்றி வைக்க சிறு மேடை போன்றனவற்றை பேணுவது, வழக்கமாதலால் X என்ற உயரம் குறைய வாய்ப்புண்டு.

பாடசாலைகளிலும் தளபாடங்கள், கொங்கிறீற்றுக் கற்கள் போன்றவை இவ்வாறான கைப்பிடிச் சுவர்களுக்கு அருகே விடப்படுவதை அவதானிக்கலாம். சிறு பிள்ளைகளை மாடிக்கட்டிடத்தின் கீழே, நிலமட்டத்தில் கட்டிடத்துக்கு மிக அருகில் நடைபெறுவனவற்றை, மேலேயிருந்து அவதானிக்க வசதியாக தாமாகவே இப்பொருட்களை கொண்டு வந்து கைப்பிடிச்சுவருக்கு அருகில் வைத்து ஏறிநிற்பது வழக்கம். அல்லது கைப்பிடியில் தமது பாரத்தை கொடுத்து இரு கால்களையும் எம்பி எட்டிப் பார்ப்பது உண்டு.

எனவே பெற்றோரும், ஆசிரியர்களும், சிறுபிள்ளைகளுக்கு இது குறிப்பாக ஆரம்ப பாடசாலை சிறுவர்களுக்கு இது பற்றி உரியவிதத்தில் அறிவுறுத்தி வைப்பது நன்று. மேலும் பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் புத்தகப்பையின் வார், கொளுவிகள் (BUCKLES) என்பன நல்லமுறையில் உள்ளனவா என்பதை இடைக்கிடையாவது பரிசோதிப்பது நல்லது.

துவிச்சக்கர வண்டியில் இருக்கையில் இருக்காமல் எழுந்து நின்று மிதிக்கும் போது அல்லது வேகமாக செல்லும் ஈருருளி வண்டியொன்றின் பின்பக்கம் தகுந்த பிடிப்பின்றி இருக்கும் போதும், சடுதியாக பாரமான புத்தகப்பை ஒரு புறமாக சரிவதால் சிறு பிள்ளைகள் வீதியில் வீழ்ந்து முன்புறமாகவோ பின்புறமாகவோ வரும் வாகனத்தினால் மோதுப்பட வாய்ப்புண்டு.




மிகவிரைவில் எதிர்பாருங்கள்...

"வலம்புரியின் வாரமலர்"

உங்கள் எண்ணத்தில் சுரக்கும் கற்பனை ஊற்றை சுமந்து வருகிறது!

- இலக்கிய நயம்
- கவிதை
- சிறுகதை
- கட்டுரை
- நாவல்
- பேனா நண்பர்கள்
- சிறுவர் சிந்தனை
- மங்கையர் பகுதி
- அரசியல் விளாசல்
- கேள்வி பதில்
- வியாதிக்கு விளக்கம்

(உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்களின் பதில்)

இன்னும் பல.. பல..

உங்கள் ஆக்கங்களும் வலம்புரியின் வாரமலரில் இடம்பெற வேண்டுமா?

விரைந்து அனுப்புங்கள்.

ஆசிரியர்
வலம்புரி வாரமலர்
இல 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

## விளையாட்டுதுறை அதிகாரிகளுக்கு "யூடோ" பயிற்சி

(கொழும்பு)

வடக்குகிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அதிகாரிகளுக்கு விளையாட்டுத்துறை அமைச்சினால் "யூடோ" பயிற்சி வழங்கப்படவுள்ளது.

கொழும்பு விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனத்தில் இப்பயிற்சி நாளை 22ம் திகதி முதல் 25ம் திகதி வரை நடைபெறும்.

இப்பயிற்சிநெறியில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், அம்பாறை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களைச் சேர்ந்த விளையாட்டுத் துறை அதிகாரிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-4)

## பாப்பரசரின் பிரதிநிதி அகதிமுகாம் விஜயம

(அரியாலை)

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள பாப்பரசரின் பிரதிநிதி நேற்று முன்தினம் தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து கரவெட்டியிலுள்ள மக்களை நேரில் சென்று பார்வையிட்டார் இவருடன் நீதி சமாதான ஆணைக்குழுவின் சார்பில் மன்னார் ஆயர் அதிவணக்கத்துக்குரிய இராயப்பு ஜோசப், கண்டிஆயர் அதி.வணக் கத்துக்குரிய வியானிபர் ணாண்டோ, யாழ் ஆயர் அதி. வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆகியோரும் உடன்சென்றிருந்தனர். (ந)

# சமாதானப் பேச்சு முக்கிய கட்டத்தை அடையும் போது .மத்தியஸ்தர் தேவைப்படலாம்

## அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பேட்டி

(வவுனியா)

நியாயமான காரணங்கள் இல்லாதபோதும் உலக நாடுகள் எம்மை பயங்கரவாத அமைப் பாகக் கருதி பட்டியலிட்டது. இதனால் நாம் அதிர்ச்சி அடைந் தோம். ஆனாஷ் அந் நிலைமை அரசின் தீவிர பிரசாரத்தாலுத் தவறான தகவல்களாலும் ஏற்பட்ட தெனவும் தற்காலிக ஏற்பாடுகளே இப்பட்டியல் என்றும் உணர்ந்து கொண்டோம்

இவ்வாறு விடுதலைப்புலிக ளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் வன்னியில் பத்திரிகை யாளர்களுக்கு வழங்கிய பேட்டி யில் தெரிவித்தார் அப்பேட்டியின் விபரம் வருமாறு.

*கே:-* அரசாங்கம் புலிகளை இப்போது எதற்காக நம்பவேண் டும்?

*தமிழ்ச்செல்வன் :-*பொ.ஐ.மு அரசு அதன் கடைசிமாதங்களில் தமிழின விரோதமானதும் யுத்தத்தை ஆதரிப்பதுமான நிலைப்பாட்டை தழுவியது. பெரும்பாலானவர்கள் இதனை நிராகரித்து சமாதானத் துக்கான ஆணையை ஐ.தே.முக்கு வழங்கினர் முன்னைய அரசு புலிகளை இராணுவ ரீதியாக தோற் கடிக்க முடியும் என்று நம்பியது அது சாத்தியம் இல்லை என்பதை அனுபவம் எடுத்துக்காட்டியது ஐ.தே.மு இதனை புரிந்து கொண்டுள்ளது இதனால் பேச்சுக் களே சமாதானத்துக்கு வழிஎன அது தீர்மா னித்தது.

*கே:-* தனி ஈழக்கோரிக்கையை கைவிடுவதற்கு தீர்மானித்திருக் கிறீர்களா?

*ப:* இன்றைய கட்டத்தில் இக்கேள்விக்கு பதிலளிப்பது இலகுவானதல்ல. எமக்கு எவை எவை தரப்படுகின்றன என்பதை பொறுத்தே அது பற்றி முடிவு செய்யலாம்

*கே:* நேரடிப்பேச்சுக்களை எந்த மட்டில் எதிர்பார்க்கலாம்?

*ப:* இயல்புநிலை திரும்பும் போது அதாவது எமது மக்கள் சம உரிமையுடனும் இரண்டாந் தர குடிமக்களாக நடத்தப்படுவது நிறுத்தப்படும் போது நடை பெறும்

*கே:* இதற்கு கால எல்லை இருக்குமா?

*ப:* அது அரசாங்கத்திகன் தீர்மானத்தில் தங்கியிருக்கின் றது நாம் சமமான அந்தஸ்து உள்ள பங்காளிகளாக ஆகுவ தற்க எம்மீதான தடை நீக்கப்பட வேண்டும் அல்லவா?

*கே:* இது ஒரு முன் நிபந்தனையா?

பதில்: பேச்சுக்கள் இப்போது தான் நடைபெறுகின்றன இரு தரப்பின ருக்கும் இடையே விவகாரங்கள் ஆராயப்படுகின்றன ஆனால் நேரடியாகவல்ல நோர்வேயின் ஊடாக ஆனால் முறைப்படியான பேச்சுக்கள் நாம் அவற்றில் கலந்துகொள்வதற்கு சட்டப்படி தகுதிபெற்ற பின்பே தொடங் கப்படும் அதாவது தடை நீங்கி யதும்

*கே:* பேச்சுகளுக்கு ஒரு மத்தியஸ்தம் அல்லது அனுசர ணைஉயாளர் தேவையா?

*ப:* ஆரம்பத்திற்கு ஒரு அனுசரணையாளர் போதும் அடுத்தகட்டங்களில் ஒரு மத்தி யஸ்தர் தேவைப்படலாம்.

கே: ஏ9கண்டி வீதி திறககப் படுவதை ஆதரிக்கின்றீர்களா?

*ப:* பிரதான வீதிகள் திறக்கப்ப பின்னரே இயல்பு நிலை முற்றிலும் திரும்பியதாக கொள்ளலாம். அது ஒரு துரித அடிப்படையில் மேற் கொள்ளப்படல் வேண்டும்.

*கே:* பயங்கர வாதத்துக்கு எதிரான சர்வதேச ரீதியான போர் தீவிரம் அடையும் போது புலிகள் பெரும் இக்கட்டானநிலைக்கு தள்ளப்பட்டு விடுவார்கள் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர் அதனால் தான் நீங்கள் தீர்வை நாடுகிறீர்களா?

மோசடி அரசுக்கெதிராக, மக்கள் விடுதலைக்காகப் போராடும் அமைப்பு என ஏற்றுக் கொள்ளப் படுவோம் என்பது எம்மிடமுள்ள நம்பிக்கை. செப்டெம்பர் 11ந் திகதிய தாக்குதல்களுக்கு வெகு முன்பிருந்தே நாம் பேச்சுகளுக்கு தயார் என்பதை அறிவித்தும் செயற்பட்டும் வந்துள்ளோம்

*கே:* உங்கள் பேச்சாளார் பாலசிங்கம் தென்னிந்தியாவை விரும்புகிறார். ஆனால் அங்கிருந்து ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டி ருக்கிறது?

*ப:* பெருமளவுக்கு ஒரு மனிதாபிமானப் பிரச்சினை ஒரு அரசியல் சர்ச்சைக்குள் இழுக்கப்பட்டிருக்கிறது. முதற் காரணம் அவரது சுகவீனம். இரண்டாவது பேச்சுவார்த்தைக் கான இடத்திற்கும் வன்னிக்குமி டையிலான அண்மை. இதனால் இதுவே மிகச்சிறந்த இடம். இதனை அரசியல் கண்கொண்டு பார்த்தலா காது.

*கே:* இந்திய இராணுவத்துடன் போர் புரிந்தீர்கள். இந்தியா உங் களை தடை செய்திருக்கிறது. இவை எப்படிப் பொருந்துகின்றன.

*ப:* இது போன்ற பல சம்பவங்கள் இலங்கையிலும் நடந்திருக் கின்றன. யுத்தம் ஒரு காலத்தில் நடைபெறுகின்றது. அதுபோல் சமா தானத்திற்கென்று ஒருகாலம் வந்திருக்கின்றது. கடந்தகால நினைவுகளுக்குள் சிறைப்பட்டு விட்டோமானால் நாம் முன்னேற முடியாது. சரியான பாடங்களை கருத்தில் கொள்வோம். பழைய னவற்றை மறப்போம். புதிதாகத் தொடங்குவோம்.

*கே:* பேச்சுக்களை புலிகள் விசுவாசத்துடன் செய்வதில்லை உண்மையான பேச்சுக்கள் நெருங்கும்வேளை நிபந்தனை களை மாற்றிவிடுகிறீர்கள்

*ப:* எமது மக்களின் தேவைகளை காலத்திற்கு காலம் நாம் கூறுகிறோம். அவற்றை கோரிக்கைகள் என்றும் முன்நிபந் தனைகள் என்றும் கூறுகிறார்கள். பச்சுக்களும் அல்லது தயாரிப் புகள் முன்னேறும் போது புதுப்பிரச் சினைகள் தோன்றும். இவை முன்கூட்டியே எதிர்பார்க்கப்படு வனவல்ல. முன்புகூறியது போன்று டாக்டர் பாலசிங்கம் தென்னிந்தியா விலிருப்பது பேச்சுகளுக்கு உதவியாயிருக்கும். இது நிபந்த னையல்ல. இவைகள் திட்டமிட்ட முட்டுக்கட்டைதான் என்று கருதப்படுவது துரதிஷ்டமாகும்.

*கே:* அடுத்த கட்டம்?

*ப:* இருதரப்பும் விசுவாசமா னதும் உறுதியானதுமான நிலைப்பாடு கொண்டுள்ளதால் இப்போது சங்கடங்கள், முட்டுக் கட்டைகள் இல்லை.

*கே:* இந்தியாவுக்கு பேச்சுகளில் பங்கு இருக்கிறது என்று கூறுகி றீர்களா?

*ப:* இன்றைய நிலையில் அது ஒரு அனுசரணையாளர் என்ற நிலைக்கு கூட வந்து விடவில்லை. பேச்சுகளுக்கான இடமாக இந்தியாவை வைத்துக்கொள்ள லாம் என்பது கூட இன்னும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதனால் இந்தியா நேரடிப்பங்கு வகிக்கும் என்பது பற்றிய கேள்வியை எழுவ தற்கிடமில்லை (இ)

### புலிகளின்...

புலிகளை பற்றி அக்கட் சியினர் கொண்டுள்ள குறைந்தளவு விளக்கமும் தாழ்ந்த எண்ண முமே ஆகும்.நாட்டின் தென்பகு தியில் ஜே.வி.பி நடத்திய இரு தீவிரவாத நடவடிக்கையையும் அதனால் ஏற்பட்ட அழிவுகளையும் வடக்குக் கிழக்கில் விடுதலைப் புலிகள் நடத்திவரும் போராட்டத் தையும் ஜே. வி.பி ஒப்பிட்டு ஆராய் வேண்டும். ஜதார்த்த நிலையை ஜே.வி.பியினர் சரியாக புரிந்து கொள்ளா விட்டால் அக்கட்சியின் அழிவுக்கு அதன் தலைமைப்பீடமே காரணமாகிவிடும் எனவும் அக்கட் டுரையில் அபயவர்த்தனா தெரிவித்துள்ளார் (ந.4)


அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்
அவசர ஆலோசனைக் கூட்டம்.

காலம்: 22.01.2002 நாளை செவ்வாய்க்கிழமை
மாலை 1.30 மணிக்கு

இடம்: தலைமைச் செயலகம், யாழ்ப்பாணம்.

தலைவர்: திரு.தி.மகேந்திரராசா *(உபதலைவர்)*

தொகுதிக் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள், முக்கியத்தர்கள் முன்னைய வேட்பாளர்கள் மட்டும் கலந்து கொள்ளவும்.

(4268)



நன்றிகள் பலவுடன் நல்வாழ்த்துக் கூறுகின்றோம்



திரு.செ.கு.சண்முகநாதன்
(கூ.அ.உ.ஆணையாளர், யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் மக்கள் மீளக்குடியமர்ந்த காலகட்டத்தில், கூ.அ.உ.ஆணையாளராகப் பதவியேற்று, பிரதேசசெயலர்களின் கண்காணிப்பிலிருந்த கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுப்பேற்று மீண்டும் கூட்டுறவுச்சமூகம் புதுப்பொலிவுடன் திகழ வழிவகுத்தும், பலபுதிய கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கியும், வளர்த்தும், சிதைவுண்டு சிதறுண்டு கிடந்த கூட்டுறவு இயக்கங்களை இணைத்தும், கூட்டுறவுக்கென கூட்டுறவு வங்கியை அமைத்தும், "கூட்டுறவு" என்ற ஐந்தெழுத்து நலிந்து சிதைவுறாமல் என்றும் தலைமிர்ந்திருக்க தன்னலம் கருதாது கூட்டுறவுத் திணைக்களத்திற்கென காணிகட்டத்தை கொள்வனவு செய்தும், கூட்டுறவுப் பணியாளர்களின் நலனில் அதிக ஆர்வம் கொண்டு இழப்பீட்டு நிதியத்திற்கு புத்துயிர் கொடுத்து, அதன் பலனைப் பகிர்ந்தளித்தும், ஐந்து வருட அருஞ்சேவைக்காலத்தில்


## மரண அறிவித்தல்

### வெற்றிவேலு மயில்வாகனம்

கோப்பாய் தெற்கு கிராம சபைப்பகுதியை (வீ.சி அடி) பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு கும்பப்பிள்ளையை வசிப்பிடமாகவும் கொண்ட வெற்றிவேலு மயில்வாகனம் நேற்று (20.01.2002) காலமானார் அன்னார் காலஞ்சென்ற குணமணியின் அன்புக் கணவரும் வெற்றிவேலு(லண்டன்), வைமன்(ஜேர்மனி), குணசுலோசனா, குணறொபிசனா, ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகநாயகி(லண்டன்), தங்கேஸ்வரி(ஜேர்மனி), ஆறுமுகசாமி(அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க ஊழியர் ஆகியோரின் அன்பு மாமனாரும் கனித்தா(லண்டன்), குயின்ஸ்மேரி(ஜேர்மனி), திவியா, யுகந்தன், இந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் அரியநாயகம், நடராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரிகைகள் 21.01.2002 இன்று திங்கட் கிழமை

சிதறுண்டு கிடந்த கூட்டுறவு இயக்கங்களை இணைத்தும், கூட்டுறவுக்கென கூட்டுறவு வங்கியை அமைத்தும், "கூட்டுறவு" என்ற ஐந்தெழுத்து நலிந்து சிதைவுறாமல் என்றும் தலைமிர்ந்திருக்க தன்னலம் கருதாது கூட்டுறவுத் திணைக்களத்திற்கென காணிகட்டத்தை கொள்வனவு செய்தும், கூட்டுறவுப் பணியாளர்களின் நலனில் அதிக ஆர்வம் கொண்டு இழப்பீட்டு நிதியத்திற்கு புத்துயிர் கொடுத்து, அதன் பலனைப் பகிர்ந்தளித்தும், ஐந்து வருட அருஞ்சேவைக்காலத்தில் கூட்டுறவு என்ற அமைப்பின் மகிமையையும், தனித்துவத்தையும் மக்கள் மனதில் ஆழமாகப் பதியவைத்தும், கூட்டுறவின் மணிமகுடமாக எட்டுத்திக்கும் ஏற்றிப் போற்ற அருஞ்சேவை புரிந்த எமது சங்க எல்லைப் பரப்பின் ஏந்தல் திரு.செ.கு.சண்முகநாதன் அவர்கள் திருகோணமலை தலைமை அலுவலகத்திற்கு சிரேஸ்ட உதவி ஆணையாளராக செல்வதையிட்டு மகிழ்ச்சியடைவதோடு, அவரின் சேவை "குன்றின் மேல் தீபம்" போல மேன்மேலும் சிறக்கவும் நல்வாழ்த்துக் கூறுகின்றோம்.

**சுன்னாகம் பல.நோ.கூ.சங்கம்,**
**சுன்னாகம்.**

**தலைவர்**
**பணிப்பாளர்கள்**
**பணியாளர்கள்**

(C-3315)

*கே:* பயங்கர வாதத்துக்கு எதிரான சர்வதேச ரீதியான போர் தீவிரம் அடையும் போது புலிகள் பெரும் இக்கட்டானநிலைக்கு தள்ளப்பட்டு விடுவார்கள் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர் அதனால் தான் நீங்கள் தீர்வை நாடுகிறீர்களா?

ப: நியாயமான காரணங்கள் இல்லை நாம் நம்பினாலும் நாடுகள் எம்மை பயங்கரவாத பட்டியலில் சேர்த்தபோது நாம் ஆச்சரியமடைந்தோம். ஆனால் அது தீவிர பிரசாரத்தினாலும் தவறான தகவல்கள் வழங்கப்பட்ட தனாலும் உலக வல்லரசுகளிடம் ஆதரவைத் தேடிப் பெற்றுக் கொண்டதனாலும் ஏற்பட்ட தற்காலிக நிலைப்பாடு என்பதை உணர்கிறோம். ஆனால் நாம் ஒரு

ஆறுமுகசாமி(அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க ஊழியர் ஆகியோரின் அன்பு மாமனாரும் கனித்தா(லண்டன்), குயின்ஸ்மேரி(ஜேர்மனி), திவியா, யுகந்தன், இந்துஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் அரியநாயகம், நடராஜா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரிகைகள் 21.01.2002 இன்று திங்கட் கிழமை பிற்பகல் 2.00மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரிகைக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்

தகவல்:
ஆறுமுகசாமி
(மருமகன்)

கும்பப்பிள்ளை,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.


தங்க நகை உலகில் தமக்கென ஒரு தனியிடம் பிடித்தவர்கள்......



# விவேகா நகை மாடம்



131, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு............

# அர்ச்சனா ஜுவலர்ஸ்



118, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

176/1 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.



இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.01.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது